JL
ण्ण्211, N130 BV
N130·1·6.
188772

35 Regd. No. M. 2573.



# விஞ்ஞாபனம்

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முந்திய பகுதிகள் நுந்தம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவன்றோ? அதனை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படிக்கப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அவைகளையும் இப்பகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேரவும், தம் நண்பர் முதலாயினோர்க்கு எடுத்துச் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

“ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்.”

(கபிலர்)

பதிப்பாளர்கள்.

---

N.B.—சந்தா அனுப்பி சந்தாதாரராக சேருபவர்கள் தமக்கு கிடைத்த பகுதிகள், கிடைக்கவேண்டிய பகுதிகள் விபரம் தெரிவிக்கவும்.

குறிப்பு:— சந்தாதலை செலுத்தாதவர்கள் தாமதமன்னியில் M. O. செய்யவும். துகை அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஸஞ்சிகை V. P ல் அனுப்பலாகும். V. P.ல் அனுப்புவதில் சந்தாதாரர்களுக்கு 3அணா ஜாஸ்தி செலவு ஏற்படும்.

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை.)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "


| தொகுதி I | 1930 ஹு ஜூன்மீ<br>பிரமோதூதஹு ஆனிமீ | பகுதி VI |
|---|---|---|


## கடவுள் உண்மை.

(தொடர்ச்சி)


கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரி எழுதியது.


மீண்டவர், தம்முற்றுனில்லஞ்சென்று, ஆண்டு, அவனுல் நல்லா வேற்கப்பெற்று, இன்னடிசிலருந்தியபின், பன்னெடுநாட்களாகத் தம்மைப் பிரிந்திருந்த பாலர்களைப் பரிவுடனழைத்[illegible] களித்தனர். பெற்ரேர் நம்பிக்கை பூண்ட[illegible] பொன்னடி பணிந்து, அன்னவர்தம் ஆ[illegible]ருளைப் பெற்றுப் பெ[illegible] மகிழ்வெய்தினன். பெற்ரேருக்[illegible]பிறகும் அன்னவனது தூய

188772

நீர்மையினைப் பற்பலவாறு வியந்துரையாடி இன்பத்தாழ்ந்தனர். பிறனொருவனே தனக்குப் பெற்றோரேயில்லையென இறுமாந்திருந்தமையின் கண்கூடாக அன்னையையும் அப்பனையுங் கண்டும் அயிர்ப்பின் வலிப்பால் அவர்தமைத் தம் பெற்றோரெனச் சிறிதும் மதியாது ஒருசார் வாளா இருந்தனன். அதுகண்ட ஈன்றோர் இவனது மடமையை இகழ்ந்துரைசெய்து, தாம் பெற்றோரேயென்பதனைப் பல்வகையாற் புலப்பாடுறுத்தியபின், இப்பாலகன், நாணந்தூண்டச் சிறிதளவு நம்பிக்கை கைவரப்பெற்றவனானான். அந்நாள்தொட்டு அவ்விரு முதுகுரவரும், தம்பால் அன்புள்ளானிடம் மிக்க ஆர்வமும், அஃதில்லான்பால், அவன் நன்னெறியெய்தியொழுகுந்தனையும் அத்துணை ஆர்வமீக்கூர்வு இன்மையும் உடையராய் ஒழுகிவரலாயினர். பெற்றோர் மனத்தையும் இருவேறு பண்பினதாக்கியது இம்மதலையர்பால் நின்ற நம்பிக்கை நிறைவும் நம்பிக்கைக் குறைவுமேயன்றோ? இச்சான்று, கடவுள் நம்பிக்கை கொள்வார் உயர்வும், கொள்ளார் இழிவும் எய்துவரென்பதைத் தெளிவுறுத்துகின்றதல்லவா?

மற்றும் தெய்வ நிச்சயத்தினை யொப்பி ஒழுகுவோர் நன்னெறி வழியே நடத்தலின் அன்னவர்க்குத் தெய்வம் ஒன்று இல்லாக்காலும் கேடில்லை. அங்ஙனம் பற்றி ஒழுகாதார்க்குக் கடவுள் ஒருவர் உளராம் வழி கேடு விளைவது திண்ணமாகிறது. ஆகலின் தெய்வமெய்ப்பாடாம் செந்நெறி சேர்ந்தொழுகுதலே சாலச் சிறந்த நெறியாமென்பதனைக் கண்டோம். இதனால் கடவுள் உண்டு என்னும் கூற்றினை வலிமை செய்துகொண்டோம். இனித் தெய்வ நிச்சயஞ் செய்துகொண்டபின் தெய்வ நம்பிக்கை வழியினைச் செப்பஞ் செய்யுமாற்றினைப் பற்றிச் சிறிதளவு ஆராய்வோம்.

(தொடரும்)

(Copyright reserved by the Author.)



சாமியார் அப்பொழுது உள்ளேயிருக்கிறாரென்பதை அறிந்துகொண்டான். [illegible] அவன் [illegible]தச் சிட்டியடிக்கவே, பக்கத்துவீட்டு ஒருஜன்னற்கதவு திறக்கப்பட்டது. அதன்வழியாய், சுமார் 16வயதுள்ள ஒருசிறுவன் வெளியே எட்டிப்பார்த்தான். அவன், சபேசனைக் கண்டதும், ஆவலுடன் ஓடிவந்து அவனை உள்ளே அழைத்துச்சென்றான்.

இங்கு, இச்சிறுவனைப்பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். இவனும், இன்னும் அச்சமயம் இவனுடன் வேலை செய்துவந்த கிட்டு என்பவனும், சென்னை ராஜதானியில் மிகவும் கீர்த்திபெற்ற ஈசுவரதாஸ் என்ற ஒரு துப்பறிபவரின் முக்கிய சிஷ்யர்கள். நாம் சொல்லும் சமயம், ஈசுவரதாஸ் இனி அத்தொழில் செய்வதில்லையென்று நிறுத்திவிட்டபடியால், இச்சிறுவர்களிருவரும் தனிமையில் அத்தொழிலைக் கைக்கொண்டார்கள். சில வருஷங்களுக்குமுன், கனகபுரியிலே வாசுதேவ செட்டியார் என்ற ஒரு தனவந்தரின் 5 வயது ஆண்குழந்தை காணாமற்போனபொழுது, நாம் சொன்ன துப்புறியும் ஈசுவரதாஸ் அக்குழந்தையைக் கண்டுபிடிக்க அமர்த்தப்பட்டிருந்ததால், அவருடன் அவருடைய சிஷ்யர்களிருவரும் வந்திருந்தார்கள். அப்பொழுது, அச்சிறுவர்களைத் தற்செயலாய்ச் சந்தித்த, நம் சபேசன், அவனுக்கும் சுபாவத்தில் இத்துப்பறியும் குணம் உண்டாகையால், அவர்களுடைய நண்பனானான். எனவே, தற்சமயம், சபேசன் அவ்விருவரையும் தனக்குதவிபுரியக் கேட்டுக்கொண்டது எதிர்பார்க்கத்தக்கதே. கிட்டு என்பவன் மூர்த்தியையும், தற்சமயம் அவன் பேசவந்த தங்கவேலு என்பவன் நம் சாமியாரையும், கவனித்துக்கொள்ளும்படி எற்பாடு செய்திருந்தான். அச்சமயம், நல்லவேளையாய்ச் சாமியாரிருந்த வீட்டிற்குப் பக்கத்து வீடு காலியாயிருக்க, தங்கவேலு அதில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துவைத்துக்கொண்டான். அவன், தன்னைச் சாமியார் சற்றும் சந்தேகிக்க முடியாதவகையில், நடந்துகொண்டானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இனி நம் கதையைக் கவனிப்போம்.

சபேசன், உள்ளே சென்றதும், அவனுடன் தங்கவேலுவைப் பார்த்து, "என்டா! என்ன சமாசாரம்?" என்று வினவினன்.

தங்க:—"ஸ்வாமி! நம் சாமியார் இலேசானவரல்ல."

சபே:—"ஏன்? என்ன விசேஷம்?"

தங்க:—"முதலில் நான் கேட்கும் சில கேள்விகளுக்கு விடையளியுங்கள். சரி; இந்த வக்கில் தாண்டவம் ஐயர் உயில் எழுதிவைத்திருக்கிறரோ?"

சபே:—(ஆச்சர்யத்துடன்)"ஆம்! எழுதிவைத்திருக்கிறர்."

தங்க:—"அதன் பிரகாரம், நாம் சந்தேகிக்கும் மூர்த்தி அய்யருக்கு, ஒன்றும் கிடைக்கவில்லையோ?"

சபே:—"இல்லை. இதை நீ எப்படியறிந்தாய்?"

தங்க:—"அதைப் பிறகு சொல்லுகிறேன். அந்த உயிலுக்கு இருவர் சாக்ஷி. அதில் ஒருவர் ஏற்கனவே இறந்துவிட்டார்."

சபே:—"வாஸ்தவம்."

தங்க:—"மற்றொருவர் பெயர் சிவராமய்யர். அவர் மடத்துத் தெருவில் ஒரு வக்கில். நான் சொல்லுவது சரிதானே?"

சபே:—"முழுமையும் சரி."

தங்க:—"தற்சமயம் இவ்வுயிலை எழுதியவரும் இறந்துவிட்டார். தவிர, இவ்வுயிலைப்பற்றி வேறு ஒருவருக்கும் தெரியாது. ஆகவே தற்சமயம், இந்தச் சிவராமய்யர், இவ்வுயிலைப்பற்றித் தமக்கொன்றும் தெரியாதென்றும், அதிலிருக்கும் கையெழுத்து தம்முடையதல்லவென்றும் சொல்லிவிட்டால்......"

சபே:—"சிச்சீ! அவர் மிகவும் யோக்கியர்."

தங்கவேலு, சிரித்துக்கொண்டே, "ஸ்வாமி! பணமென்றல் பிணமும் வாயைத் திறக்கும். அதுவுமன்றி இந்த வக்கில் சிவராமய்யர் தற்சமயம் மிகவும் கஷ்டஸ்திதியிலிருக்கிறர். இதோ, எனக்குத் தெரிந்ததை உடனே சொல்லிவிடுகிறேன். சாமியாரும் நானும் இப்பொழுதுதான் அரைமணி நேரத்திற்குமுன் அவ் வக்கில் வீட்டிலிருந்து வந்தோம். நான் மெள்ள அவர்களுடைய சம்பாஷணையையும் உற்றுக் கேட்டேன். அதிலிருந்து நான் கண்டுகொண்டது என்னவென்றல், இந்த வக்கில் அவ்வுயிலைப்பற்றித் தனக்கொன்றும் தெரியாதென்று சொல்லிவிடும்பக்ஷத்தில், நம் சாமியார் அவருக்கு ரூபாய் 5000 கொடுப்பதாகக் கூறவே, வக்கில், முதலில் தயங்கியபோதிலும், பிறகு சம்மதித்துவிட்டாரென்பதும், ஏற்கனவே அவர் இதற்காக ரூபாய் 500 அடைந்துவிட்டாரென்பதுமே. இதையறிந்ததும் உடனே உங்களுக்குக் கடிதமெழுதி யனுப்பினேன்." என்றன்.



சபேசனுக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. சுமார் 5 நிமிஷநேரம்வரையில் சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தான். "வாஸ்தவம்! இவ் வக்கில் சிவராமய்யர் இஷ்டப்படும் பக்ஷத்தில் பல வம்புகள் வரக்கூடும். ஆனல், இவ்விதம் ஒரு நற்குலத்திலுதித்து நன்றய்ப் படித்த இவர் இப்பேர்ப்பட்ட கார்யம் செய்யச் சம்மதித்தது வியக்கத்தக்கதே! ஆமாமிருக்கட்டும். இதில் இந்தச் சாமியார் இவ்வளவு கவலையெடுத்துக்கொள்ளக் காரணமென்ன?" என்று யோசித்துக்கொண்டே, தங்கவேலுவைப் பார்த்து,

"சரி! இப்பொழுது சாமியார் வீட்டிலிருக்கிறரோ?" என்று கேட்க, தங்கவேலு, "ஆம்" என்றன். பிறகு சபேசன்,

"ஆமாம்! நீ இப்படி உன் அறைக்குள் உட்கார்ந்துகொண்டிருந்தால், அவர் வெளியில் போவதை நீ எப்படி அறிந்துகொள்வாய்?" என்று வினவினன். தங்கவேலு,

"ஓஹோ! நானறியாமல், அவர் வெளியே செல்ல முடியாது. ஏனென்றல், தற்சமயம், அவருடன் மூர்த்தியுமிருக்கிறர். எனவே, இவ்வீட்டின் சமீபத்தில் நம் கிட்டுவும் ஒளிந்துகொண்டிருக்கிறன். அவர்கள் வெளியே வந்த

தும், அவன் கண்டிப்பாய்ச் சிட்டியடிப்பான்." என்று விடையளிக்க, சபேசன் ஆவலுடன்,

"சரி இருக்கட்டும். சாமியார் வீட்டிலில்லாத சமயத்தில், நாம் அதற்குள் நுழைந்து, அவருடைய சாமான்களை சோதனைசெய்யமுடியுமோ?" என்று வினவினான். தங்கவேலு,

"தாராளமாய் முடியும். ஆனால், அவரிடம் சாமான் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை......" அச்சமயம், வெளியிலிருந்து ஒருவன் சிட்டியடிக்கும் சப்தம் வரவே, தங்கவேலு அவசரத்துடன்,

"சாமியார் வெளியில் கிளம்பிவிட்டார்." என்று சொல்லிக்கொண்டே, ஒரு ஜன்னலையணுகி வெளியே எட்டிப்பார்த்தான். சாலையில், சாமியாரும், மூர்த்தியும் நின்று கொண்டிருந்தார்கள். மூர்த்தி, சாமியாரைப் பார்த்து,

"அப்படியானால் வாரும் போவோம்." என்று சொல்லவே, சாமியார்,

"இப்பொழுது மணி என்ன?" என்று வினவினார். மூர்த்தி, தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, 5மணியாகிறது என்று விடையளிக்கச் சாமியார்,

"5 ஆய்விட்டதா? நான் எப்படியாவது 8மணிக்குள் திரும்பி வந்துவிடவேண்டும். சரி; வாருங்கள்." என்று சொல்லவே, இருவரும் போய்விட்டார்கள்.

உடனே தங்கவேலு பரபரப்புடன் சபேசனை நோக்கி,

"ஸ்வாமி! அவர்கள் பேசியதிலிருந்து, சாமியார் இன்னும் 2 மணிநேரம்வரையில் திரும்பமாட்டார். வேண்டுமானால் நீங்கள் அவருடைய வீட்டிற்குள் நுழைந்து, வேண்டிய சோதனை போடுங்கள். நீங்கள் இவ்வீட்டின் பின்கட்டுக்குப் போனால், இந்த இரண்டு வீடுகளுக்கும் பொதுவில் ஒரு கிணறு இருப்பதைக் காணலாம். அதை நீங்கள் எளிதில் தாண்டமுடியும். சாமியார் முன்கட்டு



அறையை வைத்துக்கொண்டிருக்கிறார். அது கண்டிப்பாய்ப் பூட்டப்பட்டிருக்கும். ஆனால், அதோ என் பெட்டியிலிருக்கும் பல சாவிகளில் ஒன்றைக்கொண்டு, அதைத் திறக்க முடியும். நீங்கள் என் வீட்டைவிட்டு போகும்பொழுது வெளியே பூட்டிக்கொண்டு சாவியை எடுத்துக்கொண்டு போய்விடுங்கள். என்னிடம் வேறொரு சாவியிருக்கிறது. சரி; நான் போகிறேன்." என்று சொல்லிவிட்டு வேகமாய் வெளியே ஓடினான்.

அச்சிறுவன் போனதும், சபேசன், வெளிக்கதவை தாளிட்டுக்கொண்டு தங்கவேலு காண்பித்த பெட்டியையணுகி, அதைத் திறக்கவே, அதில் கொத்துசாவிகள் பல இருப்பதையும், அவைகளைக்கொண்டு, எப்பேர்ப்பட்ட பூட்டையும் திறக்கக்கூடுமென்பதையும் கண்டு ஆச்சர்யப்பட்டான். பிறகு, அவன் அச்சாவிகளை ஜாக்கிரதையுடன் தன் மடியில் கட்டிக்கொண்டு, பின்கட்டுவழியாய், தங்கவேலு சொன்னபடி பக்கத்து வீட்டில் சாமியாருடைய அறையை அடைந்தான்.

ஆனால், அங்குச் சென்றதும், அவனுடைய முகம் வாட்டமடைந்தது. ஏனென்றால், அதில் அவன் எதிர்பார்த்ததுபோல் யாதொரு சாமானும் தென்படவில்லை. அவ்வறையின் மத்தியில் ஒரு கோரைப்பாயும், அதன்மேல் ஒரு அழுக்குத் தலையணையுமே காணப்பட்டன. சபேசன், மனச்சோர்வுடன், அவ்வீடு முழுமையும் கவனித்தான். எங்கும், ஜனப்புழக்கம் அதிகமில்லாததால், ஒரே குப்பை நிறைந்திருந்தது. பிறகு மறுபடியும், சாமியாருடைய அறைக்குச் சென்று, அதன் சுவர்களையும் தரையையும் கவனித்தான். ஆனால் ஒன்றும் பிரயோஜனமில்லை. கடைசியில், ஒருக்கால் அப்பாயின்கீழ் ஏதேனுமிருக்குமென்று சந்தேகித்தவன்போல் அவன் அதைப்பிடித்துத் தூக்கவே, அதன்மேலிருந்த தலையணை பொத்தென்று தரையில் விழுந்தது. உடனே, அவனுடைய முகம் மாறியது. ஏனென்றால், அத்தலையணை கீழே விழுந்ததாலுண்டான சப்தம், அது முழுமையும் பஞ்சினாலடைக்கப்பட்டதுபோ

வில்லாமல் அதற்குள் இன்னும் கனமுள்ள வஸ்துக்கள் இருப்பதுபோலிருந்தது. உடனே, ஆவலுடன் அதை எடுத்துத் தன் விரல்களால் நெருடிப்பார்த்தான். அவனுடைய முகம் மலர்ந்தது. மறுநிமிஷம், ஆத்திரத்துடன், அதன் மேல்துணியை அப்படியே கிழித்துவிட்டு, உள்ளே இருந்ததைத் தரையில் கொட்டினான். உடனே திடீரென்று ஒரு மின்னல் தோன்றி அவனுடைய கண்களைப் பறித்தது போலிருந்தது. அதற்குக் காரணம், தரையில் பஞ்சுடன் கிடந்த வஸ்துக்கள், தற்சமயம் வக்கில் தாண்டவம்ஐயர் வீட்டிலிருந்து காணாமற்போயிருந்த வைரநகைகளையொழிய வேறல்ல.

---

## அத்தியாயம் 9.

சபேசன், தான் சாமியாருடைய அறையிலிருந்து கண்டெடுத்த நகைகளைத் தன்னுடன் எடுத்துவந்துவிட்டானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அவன் மறுபடியும் தன் நண்பனுடைய வீட்டை யடைந்ததும், தாண்டவம்ஐயருடைய பெட்டியிலிருந்து, அவ்வீட்டு நகைகளின் பெயர்களையும், விலைகளையும் குறித்துவைத்திருந்த கடிதத்தையெடுத்துப் பார்த்ததில், அச்சமயம் தன்னிடமிருந்த நகைகளெல்லாம் சரியாயிருப்பதைக் கண்டு சந்தோஷித்தான். பிறகு, பக்கத்தில் வியப்புற்றுத் தன்னையே உற்று நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்த தன் நண்பனைப் பார்த்து,

“ராஜேந்திரா! இந்தச் சாமியார், நாம் நினைத்ததைக் காட்டிலும், இதில் அதிக விஷமம் செய்கிறானென்பதில் சற்றும் ஐயமில்லை. இந்நகைகளை உன் தமயன் களவாடவில்லையென்பது நிச்சயம். அப்படியிருக்கும்பக்ஷத்தில், இவைகள் சாமியாரிடம் சென்ற வழியென்ன? இன்னும், இவன் உன் தந்தை எழுதிவைத்திருக்கும் உயில் வாஸ்தவமானதல்லவென்று ருசுப்பிக்க ஏற்கனவே ஏற்பாடுசெய்துவிட்டானென்றும் வெளியாகிறது. ஆனால், இப்படிச் செய்வதால் அவனடையக்கூடிய லாபமென்ன?” என்றுகூறவே ராஜேந்திரன், ஆச்சர்யப்பட்டவனாய்,



“என்ன? அதை வாஸ்தவமானதல்லவென்று ருசுப்பிப்பதா? அதை எப்படிச் செய்யக்கூடும்?” என்று வினவினான்.

சபேசன், வக்கில் சிவராமய்யர் வீட்டில் நடந்த விஷயங்களையெல்லாம், விபரமாய்க் கூறவே, ராஜேந்திரனுக்குண்டான வருத்தத்திற்களவில்லை.

ராஜே:—“என் தமயனுக்கும், இந்தச் சாமியாருக்கும் என்ன சம்பந்தம்? சபேசா! மூர்த்தி எதற்காக இப்படியெல்லாம் செய்யவேண்டும்? நான்தான் பன்முறை அவனுக்கு இதைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்றும், நியாயமாய் அவனுக்குள்ள பாகத்தை......”

சபே:—“ராஜேந்திரா! நீ வெளுத்ததெல்லாம் பாலென்று நினைப்பவன். எல்லோரும் உன்னைப்போலவே இருப்பார்களென்று எண்ணுகிறாய். அயோக்கியர்கள் எப்பொழுதும், மற்றவர்களைச் சந்தேகிப்பார்களேயொழிய, எளிதில் நம்பமாட்டார்கள்.”

ராஜே:—“அடாடா! என்ன வெட்கக்கேடு? என் தந்தை இறந்து இன்னும் 10 நாட்கள்கூட ஆகவில்லையே. இதற்குள், இவன் அவருடைய சொத்துக்காகச் சச்சரவிட ஆரம்பித்துவிட்டானே. சபேசா! இதையறிய நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.”

இந்நிலையில், பேசிக்கொண்டேயிருந்த சபேசன் சிந்தனையிலாழ்ந்துவிட்டான். கடைசியில், அவன் ஏதோ யோசனையுடன்,

“ராஜேந்திரா! உன் தந்தை தினந்தோறும் தாம் செய்யுங் காரியங்களைக் குறித்துவைப்பதுண்டோ?” என்று வினவ, ராஜேந்திரன்,

"உண்டு, அவருடைய பாக்கெட் டைரியில் எழுதி வைப்பது வழக்கம்." என்று விடையளித்தான்.

சபே:—"தற்சமயம் அந்த டைரி எங்கே?"

ராஜே:—"அதோ, அவருடைய சட்டைப்பையிலிருக்கலாம்."

சபே:—"இருக்கிறதோ பார்! இருந்தால் அதையெடுத்துவா."

ராஜேந்திரன் சற்றுநேரத்திற்கெல்லாம், ஸ்ரீவித்யா பாக்கெட் டைரி ஒன்றைச் சபேசனிடம் கொண்டுவந்து கொடுக்கவே, சபேசன், ஆவலுடன், அதன் பக்கங்களைப் புரட்டினான். திடீரென்று, ஒரே தாவலாய்த் தாவி அடக்க மாட்டாத சந்தோஷத்துடன்,

"ராஜேந்திரா! இதோ பார்!" என்று சொல்லிக் கொண்டே, அந்த டைரியின் ஒரு பக்கத்தைத் தன் நண்பனிடம் காண்பித்தான். அதன் தலைப்பில் காணப்பட்ட தேதியில்தான் அவ்வுயிலும் எழுதப்பட்டிருந்தது. அதில் தாண்டவம்ஐயர் கீழ்க்கண்டவாறு எழுதிவைத்திருந்தார்:—

"பல காரணங்களைக்கொண்டு, நான் ஒவ்வொரு நிமிஷமும், என் உயிருக்கே ஆபத்துவரக்கூடுமென்று எதிர்பார்க்கிறேனாகையால் இன்று இரவு ஒரு உயிலை எழுதிவைத்தேன். அதற்கு என் நண்பர்களாகிய ஸ்ரீநிவாஸய்யரும், வக்கில் சிவராமய்யரும் சாக்ஷிகள். என் சொத்துமுழுமையும் இரு சமபாகங்களாகப் பிரித்து, அதிலொன்றை என் இளைய குமாரனாகிய ராஜேந்திரனுக்கும், மற்றொன்றை என் பெண் ஜானகிக்கும் எழுதிவைத்திருக்கிறேன். என் மூத்த குமாரனாகிய மூர்த்தி, ஆதியிலிருந்து, என் இஷ்டத்திற்கு முழுமையும் விரோதமாய் ஒவ்வொரு காரியத்தையும் செய்துவருவதாலும், இன்னும், பணமிருக்கும்பக்ஷத்தில், அவன் மேலும் கெட்டுவிடுவானென்று நான் நினைப்பதாலும், அவனுக்கு எதையும் கொடுக்க எனக்கிஷ்டமில்லை."

இதை வாசித்ததும், ராஜேந்திரன் தன் தோழனை நோக்கி,



"சபேசா! இது நமக்கு ஒரு பெரிய ஆதாரமென்று நினைக்கிறேன்." என்றான்.

சபேசன், "அதில் தடையென்ன? இருக்கட்டும், இந்த வக்கில் சிவராமய்யர் ஏதேனும் விஷமம் செய்வாராகில், அவரைச் சந்தியிலிழுத்துவிடுகிறேன்." என்று கூறவே, ராஜேந்திரன்,

"சபேசா! அனாவசியமாய் அவரை அவமானப்படுத்த எனக்கிஷ்டமில்லையாகையால், நீ உடனே அவரிடம்சென்று அவர் ஏதேனும் வம்புசெய்யும்பக்ஷத்தில் வீணாய்க் கஷ்டப்படுவாரென்று சொல்லிவிட்டு வா. தற்சமயம், நாம் இதைப் பற்றி சச்சரவிட்டுக்கொண்டிருப்பது அழகல்ல. நீ என் தமயன் பெரும் ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறானென்று சொன்னதுமுதற்கொண்டு எனக்கு அதே கவலையாயிருக்கிறது. இப்பொழுது எனக்குள்ள ஆஸ்தி முழுமையும் செலவழிந்தாலும் பாதகமில்லை. எப்படியாகிலும் நாம் அவனைக் காப்பாற்றவேண்டும். சபேசா! அவன் என்னை எவ்வளவுதூரம் வெறுத்தபோதிலும், எனக்கு அவன்மீதுள்ள பிரியத்தை என்னைப்படைத்த ஈசனே யறிவார். ஹே தெய்வமே! ஏற்கனவே என் தந்தையை யிழந்துவிட்டேன். எனவே, பாக்கியிருக்கும் என் தமயனையும் ஆபத்திற்குள்ளாக்காதேயும். அவன், மற்ற விஷயங்களில் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமாய் நடந்துகொண்டபோதிலும், இப்படித் தன் தந்தையையும் கொல்ல, அவ்வளவு சண்டாளனல்ல. அந்தோ! மூர்த்தி! இனியாகிலும் நீ திருந்தி சுகமடையமாட்டாயோ?" என்று புலம்ப ஆரம்பிக்க, சபேசன், பிரியத்துடன்,

"ராஜேந்திரா! நீ விசனப்படுவதால் வரக்கூடிய லாபமொன்றுமில்லை. ஆனால், நீ சொல்வதுபோல், உன் தமயன் இக்கொலையைச் செய்யவில்லையென்பது நிச்சயம். அவனைத் தெய்வம் எப்படியும் காப்பாற்றுவார்." என்று சமாதானப்படுத்தியபோதிலும், ராஜேந்திரன், அதிகரிக்கும் கவலையுடன்,

"ஐயோ சபேசா! போலீஸார் அவனைக் கைது—" என்று மேலே பேசுமுன், சபேசன்,

"வீணில் நேரிடக்கூடிய சம்பவங்களை நினைத்துப் பயப்படாதே. அப்படியே அவன் கைதுசெய்யப்பட்ட போதிலும், சீக்கிரம் வாஸ்தவத்தில் கொலைசெய்தவனைக் கண்டுபிடித்து, அவனை நிரபராதியென்று மெய்ப்பித்து விடலாம்." என்றான்.

ராஜேந்திரன், தன் நண்பனை யுற்றுநோக்கியவண்ணம், அவனுடைய கரங்களைப்பற்றிக்கொண்டு, ஆவலுடன்,

"சபேசா! இத்துப்பறியும் விஷயத்தில் உனக்கு எவ்வளவு சாமர்த்தியமுண்டென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால், நீ முடிந்தவரையில், இதில் சிரமப்பட்டு, என் தமயனைக் காப்பாற்றுவதாக, எனக்கு வாக்களிக்கவேண்டும்." என்று கெஞ்ச, சபேசன்,

"ராஜேந்திரா! நான் உன்னை என் சகோதரனென்றே நினைத்துக்கொண்டிருக்கிறேனென்பது நீ யறிந்த விஷயமே. ஆகவே, உன் தமயனாகிய மூர்த்தி, என் தமயனென்றே நினை. ஆனால் நீ சொல்வதுபோல் எனக்கு அவனைக் காப்பாற்ற, அவ்வளவு சக்தியும், சாமர்த்தியமும், இருக்குமோவெனப் பயப்படுகிறேன். அப்படி அவைகளிருக்கும்பக்ஷத்தில், நான் அவனைக் காப்பாற்ற என் உயிரையும் தியாகம் செய்யத் தயார்." என்று உறுதியுடன் கூறினான்.

இவ்விதம் சம்பாஷித்துக்கொண்டிருந்த தோழர்களிருவரும் திடுக்கிட்டார்கள். ஏனென்றால், அச்சமயம், அவ்வறையின் வெளிப்பக்கத்தில் யாரோ தேம்பித் தேம்பி அழும் சப்தம் அவர்களுடைய செவிகளில் விழுந்தது. உடனே, இருவரும் கலவரத்துடன் வெளியே ஓடினார்கள். மறுநிமிஷம் ராஜேந்திரன் "அண்ணா! அண்ணா" என்று அலறினான். வாஸ்தவமே; அங்கு, மூர்த்தி தன் தேகங்



குலுங்க அழுதவண்ணம் நின்றுகொண்டிருந்தான். ராஜேந்திரன், அப்படியே அவன்மீது பாய்ந்து, இறுகக்கட்டிக்கொண்டதும், அக் காக்ஷியைக் கண்ட சபேசனுடைய கண்களிலும் நீர் தளும்பியது.

பிறகு, ராஜேந்திரன், அளவுகடந்த பிரியத்துடன், தன் தமயனை உள்ளே அழைத்துச் சென்று, அவனை ஒரு ஆஸனத்தில் உட்காரவைத்தான். அச்சமயம், மூர்த்தியின் சரீரம் முழுமையும் நடுங்கிக்கொண்டிருந்தது. இன்னும், அவனுடைய முகம் வியக்கத்தக்கவிதம் மாறியிருந்தது. அதில் சாதாரணமாய்க் காணப்படும் திமிரும் கர்வமும் சற்றும் தென்படவில்லை. பயத்தினால் வெளுத்தும், கவலையால் விகாரமடைந்துமிருந்த அதைக் கண்டதும், எவனும் பரிதாபப்படாமலிருக்கமுடியாது. கருவளையங்களால் சூழப்பட்ட அவனுடைய கண்களில் கலவரமும் பீதியும் நன்கு காணப்பட்டன. ராஜேந்திரன், அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, ஆவலுடன் அவன் முகத்தை யுற்றுநோக்கியவண்ணமிருந்தான். மூர்த்தி, தன் மனதிலிருந்த ஒரு குழப்பத்தின் மிகுதியால் பேசச் சக்தியற்று, பலதரம் பெருமூச்செறிந்தான். கடைசியில் தாழ்ந்த குரலில்,

"ராஜேந்திரா! உலகில் அக்கிரமம் செய்பவர்கள் சீக்கிரம் அதற்கு ஏற்ற தண்டனையை அடைவார்களென்பது வாஸ்தவமே. பால்யத்தின் பலனாய், நமக்கு எவரும் நிகரில்லையென்று, தந்தை வேண்டாம், தம்பி வேண்டாம், தங்கை வேண்டாம் என்று மமதைகொண்டிருந்த நான், இதற்குள் போதுமான சிக்ஷையை அடைந்துவிட்டேன். ஆனால், இதுவரையில் நீ இவ்வளவு உதாரகுணமுள்ளவனென்பதை நான் அறியவில்லை. அப்பா! நீங்களிருவரும் பேசிக்கொண்டிருந்த எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டிருந்தேனென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ......" என்று மேலே பேசமுடியாமல் கஷ்டப்படவே, ராஜேந்திரன்,

"அண்ணா! இதைப்பற்றி நாம் பேசவேண்டியதவசியமில்லை. தற்சமயம், உன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும்

ஆபத்திலிருந்து உன்னை மீட்கவேண்டியதே என்னுடைய முக்கிய காரியம்." என்றான்.

மூர்த்தி, "அப்பா! இனி நான் தப்பமுடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. எப்படியும், இவ்விஷயங்கள் வெளிவராமலிருக்காது. வேண்டுமானால், எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி சொல்லிவிடுகிறேன். ஆனால், நான் முதலில் ஒரு காரியம் செய்யவேண்டும்." என்று திரும்பி, சபேசனைப் பார்த்து,

"சபேசா! நான் இதுவரையில், உன்னை ஏதோ ஒரு வண்டியோட்டுபவனென நினைத்து, உன்னை அலக்ஷியம் செய்ததையும், பலதரம் அவமானப்படுத்தியதையும் என்னால் மறக்கமுடியாது. இன்னும், நீ இவ்வளவு சூக்ஷ்ம புத்தியும், அதற்கேற்ற சாமர்த்தியமுமுள்ளவனென்பது எனக்குத் தெரியாது. ......" என்று அவன் மேலே பேசுமுன், சபேசன், மரியாதையுடன்,

"இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க நமக்கு நேரமில்லை. நீ என்னை அலக்ஷியம் செய்ததாலும், அவமானப்படுத்தியதாலும் ஒன்றும் பாதகமில்லை. எப்படியாவது நீ இந்த இக்கட்டிலிருந்து தப்பினால் போதும். நல்லவேளையாய், நாங்களிருவரும் இதுவரையில் பேசிக்கொண்டிருந்ததை நீயும் கேட்டுக்கொண்டிருந்ததால், உன்னுடைய தற்கால நிலைமை மிகவும் பயங்கரமென்பதை நான் உனக்கு எடுத்துக்காட்டவேண்டியதவசியமில்லை. ஆகவே, உனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் உடனே விவரமாய்ச் சொல்லும்படி உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் இதில் சற்றும் காலதாமதம் செய்வது பிசகு. போலீசார் இவ்விஷயங்களை அறியுமுன், நாம் வாஸ்தவத்தில் கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்." என்றான். உடனே, மூர்த்தி,

"சரி; எனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிடுகிறேன். ஆனால், அதிலிருந்து உனக்கு யாதொரு உளவும் அகப்பட வழியில்லை. இன்னும் அதிலிருந்து என்னுடைய பலகெட்ட



பழக்கங்கள் வெளியாகும். இருந்தாலும் பாதகமில்லை. நான் இவ்வூரில் ஒரு தாஸியை வைத்துக்கொண்டிருப்பதை நீ இதற்குள் அறிந்திருப்பாய். கொலை நடந்த இரவு சுமார் 10மணிக்கு நான் அவளுடைய வீட்டிற்கு போனபொழுது அன்று அங்கு ரங்காட்டம் ஆடப்போவதாயும், ஆனால், கையில் குறைந்தது 200ரூபாய் முதலில்லாதவர்கள், அதற்குச் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்களென்றும் கேள்விப்பட்டேன். எனக்கு எப்பொழுதுமே இந்த ரங்காட்டத்தில் மிகவும் பைத்தியமாகையாலும் அச்சமயம் என்னிடம் பணமில்லாததாலும் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தேன். நான் அங்கிருந்த பலரைக் கெஞ்சிக் கேட்டும், எல்லோரும் கடன்கொடுக்க மறுத்துவிட்டார்கள். இங்கு ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன். அதாவது அன்று மாலை, ராமராவ் கடையிலிருந்து ஒரு டஜன் பட்டுக்கைக்குட்டைகள் வாங்கிவந்து என் வைப்பாகிய ராஜலெக்ஷ்மிக்குக் கொடுத்திருந்தேன். கடைசியில் நான் எப்படியாகிலும், யாரிடமிருந்தாவது பணம்கடன்வாங்கிக்கொண்டு வருவதெனத் தீர்மானித்து அவ்வீட்டைவிட்டு வெளிக்கிளம்பும் சமயம், என் வைப்பு அக் கைக்குட்டைகளில் ஒன்றில் வாசனைபோட்டு என்னிடம் கொடுத்தாள்.

என் தந்தை நான் கேட்கும்பொழுதெல்லாம் காரணம் கேட்காமல் எனக்குப் பணம் கொடுப்பதுண்டாகையால், அகாலமாயிருந்தபோதிலும் அவரிடம் போவதே நலமெனத் தீர்மானித்து, இவ்வீட்டைநோக்கி நடக்க ஆரம்பித்தேன். கடைசியில் நான், மடத்துத்தெருவில் எங்களுக்குள்ள வீட்டின் சமீபம் வந்தபொழுது, அதிலிருந்து ஒருவன் வெளிக்கிளம்பியதைக்காண ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால், அது, சென்ற மூன்றுமாதகாலமாய்க் குடியின்றிப் பூட்டப்பட்டிருக்கிறது. இன்னும் அவனுடைய நடையைக் கண்டதும், என் மனதில் ஒருவித சந்தேகம் தோன்றியது. ஆனால், அவனுடைய முகத்தையாவது, அங்க அடையாளங்களையாவது நான் சற்றும் கவனிக்க முடியவில்லை. பிறகு, நான் அவ்வீட்டையணுகி அதன் கத

வைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். அது நன்றாய்த் திறக்
கப்பட்டிருந்தது. மேலும் ஆச்சர்யப்பட்டவனாய் உள்ளே
நுழைந்தேன். எங்கும் ஒரே இருட்டாயிருந்தது. ஒன்றும்
தெரியாமல், தடவிக்கொண்டே, முன்கட்டிலிருக்கும் ஒரு
அறைவரையில் நடந்தேன். அப்பொழுது என் சட்டைப்
பையில் நெருப்புப்பெட்டியிருப்பது ஞாபகம்வர, அதிலி
ருந்து ஒரு குச்சியைக் கிழித்துப் பார்த்ததில், அடுத்த
அறையில், தரையில் ஒருவர் அலங்கோல நிலைமையில் படுத்
துக்கிடப்பதுபோலிருந்தது. ஆனால் அவ்வெளிச்சத்தில்
அது யாரென்பது புலப்படவில்லை. நான் அவரைச் சமீபிப்
பதற்குள், நெருப்புக்குச்சி அணைந்துவிட்டது. அச்சமயம்
அவ்வறைக்குள்ளிருந்து மற்றொருவன், திடீரென்று பாய்
ந்து வெளியே ஓடினான். அதைக் கண்டதும் எனக்குண்
டான பயத்திற்களவில்லை. என் கைகால்கள் நடுங்க
ஆரம்பிக்கவே, அவனைப் பின்பற்றிச்செல்ல மதியிழந்து
விட்டேன். இவ்விதம் என்ன செய்வதென்று அறியாமல்
திகைப்புற்று, சுமார் இரண்டு நிமிஷநேரம் நின்றபிறகே,
நான் அவனைப்பிடிக்காமல் விட்டுவிட்டது பிசகெனக் கண்டு
கொண்டேன். ஆனால், இனி அவனைப் பிடிப்பது முடியாத
கார்யமென நினைத்து, தரையில் கிடந்தவரைக் கவனிக்க
லானேன். மறுபடியும் மற்றொரு நெருப்புக்குச்சியைக்
கிழித்து, அதை அவர் சமீபத்தில் பிடிக்கவே, அவர் என்
தந்தை என்பதையும், அவர் கொடூரமாய்க் கொலைசெய்யப்
பட்டிருக்கிறாரென்பதையும் கண்டதும், என் மனோநிலை
மையை என்னால் சொல்லமுடியாது. சுபாவத்தில் நான்
எவ்வளவு முரடனாகவும், அயோக்கியனாகவுமிருந்தபோதி
லும், அச்சமயம், என் மனந்தாளாமல், அப்படியே அவர்
மேல் விழுந்து புரண்டழுதேன். இவ்விதம் சுமார் 10நிமிஷ
நேரம் கழிந்திருக்கும். அதன்பிறகு, நான் மிகவும் சந்தே
கிக்கத்தக்க நிலைமையிலிருந்தேனென்பதையும் நான்
என்ன சொன்னபோதிலும் எனக்கும் என் தந்தைக்
கும் அதுவரையிலிருந்த ஒரு மனஸ்தாபத்தினால், நானே
அவரைக் கொலைசெய்ததாக ஏற்படுமென்பதையுமுணர்ந்து



பைத்தியம்பிடித்தவன்போல் அவ்வீட்டைவிட்டு வெளியே
ஓடினேன். அப்பப்பா! அன்று இரவுமுழுமையும் நான்
பட்டபாட்டை என்னாலெடுத்துச் சொல்லமுடியாது. இப்
படி என்னைப் பெற்றுவளர்த்த என் தந்தை அநியாயமாய்க்
கொலைசெய்யப்பட்டுக் கிடப்பதை யறிந்தும், அதை நான்
உடனே போலீஸாருக்குத் தெரிவிக்கவும் தைர்யமற்றுத்
துடித்தேன். கடைசியில் என் வீட்டை யடைந்ததும் தலை
சுழல, தொப்பென்று தரையில் மூர்ச்சித்துவிழுந்தேன்.
மறுபடியும் நான் சுயநினைவை யடைந்தபொழுது, நல்ல
வெளிச்சமாயிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து, என்
சட்டைத் துணிமணிகளைக் கண்டு மேலும் திடுக்கிட்டேன்.
ஏனென்றால், அவைகளில் இரத்தக்கறைகள் ஏதேஷ்டமா
யிருந்தன. உடனே, அவசரத்துடன் அவைகளைக் களைந்து,
சற்றும் தாமதமின்றி எரித்துவிடத் தீர்மானித்தேன்,
ஆனால், நானப்படிச் செய்யுமுன், கீழே வெளிக்கதவு பல
மாய்த் தட்டப்படவே, என் தந்தை கொலை செய்யப்பட்
டிருப்பது ஏற்கனவே வெளியாய்விட்டதென்பதையும்,
அதை எனக்கு தெரிவிக்கும்பொருட்டே யாரோ வந்தி
ருக்கவேண்டுமென்பதையும், ஊகித்து அத் துணிமணிகளை
யப்படியே என் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, அந்த
அறையின் கதவையும் ஜாக்கிரதையாய்ப் பூட்டிக்கொண்டு
வெளியே ஓடினேன். பிறகு சவம் கிடந்த இடத்தில் என்
கைக்குட்டை யிருப்பதை அறிந்ததும், நான் திகிலடைந்து
விட்டேன், நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னிலையில்
ஒன்றுமறியாதவன்போல் பாசாங்குசெய்தபோதிலும்,
அன்று முழுமையும், அத்துணிகளைப்பற்றிய கவலையே
என்னை வதைத்துக்கொண்டிருந்தது. எனவே, அன்று
நாமெல்லோரும் மயானத்திலிருந்து திரும்புகையில், ராஜே
ந்திரன் தன்னுடன் வரும்படி என்னை யழைத்தும், நான்
வாராததற்குக் காரணம் இதுவே.

பிறகு, என் வீட்டை யடைந்ததும் நான் பயந்தது
போலவே, அத்துணிகள் களவாடப்பட்டிருப்பதைக் கண்
டதும், என் பயத்தையும் கவலையையும் நான் விவரிக்க

வேண்டுமோ? தவிர, என் மேஜையின்மேல், ஒரு கடிதமிருப்பதைக் கண்டேன். அதில், ஒருவன் தன்னை அன்று இரவு 10மணிக்குள் நான் போய் சந்திக்காதபக்ஷத்தில், நான் உடனே கைதுசெய்யப்படுவேனென்று பயமுறுத்தி எழுதியிருந்தான். வேறுவழியில்லாமையால், நான் போய்க் காண, அவன் ஒரு பால்யச்சாமியாரென்பதையும், அவனே எப்படியோ என்ரஹஸ்யத்தை யறிந்து, நான் ஒளித்து வைத்திருந்த துணிகளைக் களவாடியவனென்பதையும் கண்டுகொண்டேன். ஆகவே, நான் அவனிடம் மீளவகையின்றி மாட்டிக்கொண்டேனென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. அவன், ஏற்கனவே நான் அவனிடமிருந்து பெருந்தொகைகளைக் கடன்வாங்கியதாக, பல பத்திரங்களைத் தயார்செய்து வைத்திருந்தான். அவைகளில் நான் உடனே கையெழுத்துப் போடாவிடில் போலீஸாரிடம் என்னைக் காட்டிக்கொடுத்துவிடுவதாக விரட்டவே, மறுக்கவழியற்று, அவன் காண்பித்த இடங்களிலெல்லாம் கையெழுத்துப் போட்டேன். அவன் இவ்விதம் என்னிடமிருந்து எளிதில் பணம் பறிக்கலாமென்று நினைத்ததற்குக் காரணம், நான் அவசியம் என் தந்தையின் சொத்தில் பாதி பாகம் அடைவேனென்று எதிர்பார்த்தான். ஆனால், நாம் இன்றுகாலை கண்டெடுத்த உயிலில் நானடையக்கூடியதொன்றுமில்லையென்று வெளியானதும், என்னசெய்வதென்று தெரியாமல் அவனிடம் சென்று கெஞ்சினேன். ஏனென்றால், என்னிடமிருந்து பணம் கிளம்ப வழியில்லையென்பதையறிந்ததும் அவன் உடனே என்னைப்பற்றிப் போலீஸாருக்கு அறிவிக்கக்கூடுமென்று நடுங்கினேன். அவன் இவ்வுயிலைப்பற்றிய விஷயங்களையறிந்ததும், இதை எப்படியாவது வாஸ்தவமானதல்லவென்று மெய்ப்பிக்க நினைத்து, சற்றும் தாமதஞ்செய்யாமல், மடத்துத்தெரு வக்கில் சிவராமய்யரை சரிப்படுத்திவிட்டான். இவ்வளவே நான் சொல்லக்கூடியவை.'' என்றான்.

இதைக்கேட்டதும், சபேசன் கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தான். பிறகு, மூர்த்தியைப் பார்த்து,



"நீ சொல்லியவை முழுமையும் உண்மையென்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதிலிருந்து வாஸ்தவமான கொலை பாதகனைக் கண்டுபிடிக்க யாதொரு உளவுமில்லை. இருந்த போதிலும், கொலைநடந்த இரவு நீ பார்த்த இருவர்களில் ஒருவரையாவது, யாரென்று சொல்லமுடியுமாவென்பதையும், இன்னும் நீ சவம்கிடந்த அவ்வறைக்குள் நுழைந்ததும், அங்கு நீ கண்ட ஒவ்வொரு விஷயத்தையும், மறுபடியும் நன்றாய் ஞாபகத்திற்குக்கொண்டுவந்து, நீ புதிதாய்ச் சொல்லக்கூடியது ஏதாவதுண்டாவென்பதையும் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.'' என்றான்.

ஆனால் மூர்த்தி உறுதியுடன் தான் சொல்லக்கூடிய தொன்றுமில்லையென்று விடையளித்தான்.

பிறகு சுமார் அரைமணிநேரம்வரையில், அம்மூவரும் பலவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அதன் முடிவில் மூர்த்தி தான் சற்றுக்கீழே போய்விட்டு வருவதாகச்சொல்லி அவ்வறையைவிட்டு வெளியே சென்றான். ஆனால் கொஞ்சதூரம் சென்றவன் கலவரத்துடன் பின்னடைந்தான். அவன் முகம் மேலும் வெளுத்தது. கைகால்கள் நடுங்க, மூச்சுவிடவும் திணறிக்கொண்டு மறுபடியும் ஓடி ஓர் ஆசனத்தின்மேல் தொப்பென்று விழுந்தான். மறுநிமிஷம், போலீஸ் இன்ஸ்பெக்டர், முனுசாமிநாயுடு அவ்வறைக்குள் நுழைந்தார். அவர் தடுமாற்றத்துடன், மூர்த்தியைநோக்கி,

"ஐயா! உம்மைக் கைதுசெய்திருக்கிறேன்.''என்றார்.

* * * * *

மறுநாட்காலை 8மணியிருக்கும்.

தாண்டவம் அய்யர் வீட்டில் சபேசனும், ராஜேந்திரனும் மிகவும் கவலையுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவர்களுடைய தங்கைகளான ராஜமும், ஜானகியும் அங்கு வர, அதில் ராஜம் பரபரப்புடனும், ஏதோ பேசப்பிரியப்படுபவள்போலும் காணப்பட்டாள். அதைக்கண்ட சபேசன்,

"ஏனம்மா! உனக்கென்னவேண்டும்?" என்று கேட்க, ராஜம் லஜ்ஜையுடன் ஒருதரம் ராஜேந்திரனை நோக்கிவிட்டுப் பிறகு தாழ்ந்தகுரலில்,

"அண்ணா! இக்கொலை நடந்ததிலிருந்து நீ அதைச் செய்த பாதகனைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்து அதே கார்யமாயிருப்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகவே உன் தங்கையாகிய நான் இதில் என்னால் முடிந்தவரையில் உனக்கு உதவிபுரிய எண்ணங்கொண்டது ஆச்சர்யப்படத்தக்கதல்ல." என்றாள்.

இதைக்கேட்ட அவ்வாலிபர்களிருவரும், பிரமித்துக் கொஞ்சநேரம், அப்பெண்மணியை உற்றுநோக்கியவண்ணமிருந்தார்கள். பிறகு சபேசன், ஆவலுடன்,

"அம்மா ராஜம்! நீ சொல்லுவது நம்பத்தக்கதாயில்லையே! ஆனால் நீயும் இதில் வேலைசெய்யத் தீர்மானித்துவிட்டாயோ?" என்று வினவ, ராஜம்,

"அப்படி ஒன்றும் நான் சொல்லவில்லை. இருந்தபோதிலும், நான் கண்டுபிடித்திருக்கும் சில விஷயங்களைக் கொண்டு உனக்கு மிகவும் உதவிசெய்யக்கூடும்." என்றாள்.

சபேசன்:—"என்ன? நீ கண்டுபிடித்திருக்கும் விஷயமா? உனக்கென்ன தெரியும்?"

ராஜம்:—"எனக்குச் சில விஷயங்கள் தெரியுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், நான் அவைகளை உன்னிடம் சொல்லுமுன், நீ இதுவரையில் கண்டு பிடித்திருக்கும் விஷயங்களை என்னிடம் சொல்லவேண்டும்." சபேசன், தயங்குவதைக்கண்டதும், "அண்ணா! நான் பெண் என்ற ஒரு காரணத்தால் நீ என்னை நம்ப இஷ்டப்படவில்லையென்பதை உன் முகமே சொல்லுகிறது. ஆனால் பெண்களுக்கும், ஆண்களைப்போல் சூக்ஷ்ம புத்தியும், எண்ணிய கார்யத்தைச் செய்துமுடிக்கும் ஊக்கமும் சாமர்த்தியமுமிருக்கக்கூடுமென்பதை நீ அறிந்துகொள்வது நலம்."



சபேசன்:—"ராஜம்! நீ தற்சமயம் பேசியதைக்கேட்க, நீ என் தங்கைதானோவென்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. அம்மா! உன் பேச்சிலிருந்து சென்ற இந்தச் சிலதினங்களுக்குள் நீ மிகவும் வேலை செய்திருப்பதாகத் தோன்றுகிறது. சரியிருக்கட்டும். முதலில் நான் கண்டுபிடித்ததைச் சொல்லவேண்டுமென்றல்லவோ கேட்கிறாய்! இதோ சொல்லுகிறேன் கேள்." என்று சபேசன் தனக்குத் தெரிந்ததைச் சீக்கிரம் சொல்லிமுடித்ததும், ராஜம்,

"அண்ணா! நீ இந்த மூர்த்தி என்பவரைச் சந்தேகித்தது நியாயமே. ஏனென்றால், கொலை நடந்ததினம் அவர் முகத்தில் காணப்பட்ட கலவரத்தையும், அதன்மூலம் அவருடைய மனதிலிருக்கவேண்டிய குழப்பத்தையும் பீதியையும், கண்டவர்கள் கண்டிப்பாய்ச் சந்தேகித்தேயிருப்பார்கள். ஆனால், அச்சமயம் அவருடைய முகத்தை நீ நன்றாய்க் கவனித்திருந்தாயானால், அதில் பயத்தின் குறிகள்மட்டும் காணப்பட்டனவேயொழிய, சாதாரணமாய் இப்பேர்பட்டக் கொலைகளைச்செய்யக்கூடிய சண்டாளர்களின் முகங்களில் காணப்படும் ஒருவித குரூரப்பார்வையும் பயங்கரத்தோற்றமும் சிறிதுமில்லாமலிருந்ததைப் பார்த்திருப்பாய். நீ அவர் அன்று இரவு போய்க்கண்டதாகச் சொன்ன இந்தச்சாமியார் இதில் மிகவும் விஷமம் செய்கிறானென்று சொல்லியதில் சந்தேகமேயில்லை. ஆகவே, அவன் நழுவமுடியாமல், நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்." என்றாள். சபேசன்,

"வாஸ்தவமே! ஆனால், அவன் தப்ப முடியவே முடியாது. ஏனென்றால், துப்பறியும் சிகாமணிகளில் ஒருவருடைய பிரதம சிஷ்யன், தற்சமயம் அவனைக் கவனித்துவருகிறான். சரியிருக்கட்டும். நீ கண்டறிந்ததை உடனே சொல்லு." என்றுகேட்க, ராஜம், மறுபடியும் ராஜேந்திரனைப் பார்த்துவிட்டு,

"இதோ சொல்லுகிறேன். ஆனால், நீங்கள் மிகவும் அவசரப்படுவதால், முதலில் விஷயத்தைச்சொல்லிவிட்டுப்

பிறகு, அதை நான் கண்டுபிடித்த வழியைச் சொல்லுகிறேன். அதாவது, தற்சமயம் கொலைசெய்யப்பட்டிருப்பவர் என் தோழியின் தந்தை தாண்டவம் ஐயரல்ல.'' என்றாள்.

---

## அத்தியாயம் 10.

---

ராஜம், ''தற்சமயம் கொலை செய்யப்பட்டிருப்பவர் தாண்டவம் ஐயரல்லர் என்று சொன்னதும் அங்கிருந்த மற்ற மூவருக்குமுண்டான ஆச்சர்யத்தை நம் நேயர்களே யூகித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய செவிகளை நம்ப இஷ்டப்படாதவர்கள்போல், அப்படியே பிரமித்து நின்றார்கள். கடைசியில் சபேசன்,

''ராஜம்! நீ சொல்லுவது நம்பத்தக்கதாயில்லையே! அம்மா! நீ இப்படிச் சொல்லுவதற்குக் காரணமென்ன? நீ கண்டுபிடித்ததை உடனே விபரமாய்ச் சொல்லு.'' என்று கேட்க, ராஜம்,

''அண்ணா! நான் எனக்குத் தெரிந்ததை அடியிலிருந்தே சொல்லுவதே நலம். இக்கொலை நடந்ததினம் சவம் இவ்வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டதும், புருஷர்களெல்லோரும் அதை முன்கட்டில் போட்டுவிட்டு வெளியே போய்விட்டீர்கள். பிறகு அதை நீங்கள் ஒருவரும் கவனிக்கவேயில்லை. ஆனால் முதலில் அதைச் சூழ்ந்துகொண்டிருந்த பெண்மணிகளும் வர வர, அதைவிட்டு விலகிவிட்டோம். சற்றுநேரத்திற்கெல்லாம், நான் கவனித்த ஒரு சம்பவம் நடந்தது. அதாவது இவ்வீட்டுச் சமையற்காரனாகிய கிருஷ்ணன் எல்லோரும் போனதும் சவத்தின்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கொஞ்சநேரம் அழுதவண்ணமிருந்தான். கடைசியில் அதை மூடிக்கொண்டிருந்த துணியை விலக்கி அதன் கரங்களையெடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டவன் திடுக்கிட்டான். பிறகு சுமார், இரண்டு நிமிஷநேரம்



வரையில் அதன் கைவிரல்களை யுற்றுநோக்கியவண்ணமிருந்தான். அவன் மனதில் ஏதோ சந்தேகங்கொண்டிருக்கிறானென்பதை நானறிந்துகொண்டேன். அது முடிந்ததும் அவன் சவத்தின் முகத்தைத் திருப்பி அதன் காதுகளைக் கவனித்தான் உடனே அவனுடைய ஆச்சர்யமும் சந்தோஷமும் அதிகரித்தன. பிறகு பெருமூச்செறிந்துகொண்டே எழுந்து போய்விட்டான். இதை என்னைத்தவிர வேறு ஒருவரும் கவனிக்கவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் எல்லோரும் மசானத்திற்குப் போய்விட்டீர்கள். ஆச்சமயம் இவ்வீட்டில் நான், ஜானகி, இன்னும், கிருஷ்ணன், இம்மூவருமே இருந்தோம். உடனே நான் அவனைத்தனிமையில் அழைத்து, விசாரித்தேன். இப்பொழுதும், நாம், அவனை நேரில் அழைத்து மறுபடியும் கேட்போம்.'' என்று சொல்லவே, உடனே சமயற்காரனாகிய கிருஷ்ணன் கூப்பிடப்பட்டான். அவன் சொன்னதாவது:—

''என் யஜமானருடைய வழக்கங்களை நான் நன்கறிவேன். அவர், முக்கியமாய்த் தம் கைவிரல்களை மிகவும் சுத்தமாய் வைத்துக்கொள்ளுவார். அதில் நகம் வளரும் பக்ஷத்தில் அழுக்கடையுமென்று, தான் க்ஷவரம் செய்துகொள்ளும்பொழுதெல்லாம் அவைகளை முடிந்தவரையில் கத்திரித்துவிடுவது வழக்கம். இன்னும் இக்கொலை நடந்ததற்கு முந்தியதினம், காலை நான் அவருக்குச் சாதம் போட்டபொழுது, என் விரல்களில் அழுக்கடைந்திருப்பதைக்கண்டு, கோபித்துக்கொண்டார். ''அடே! இதோ பார்! என் விரல்களில் அழுக்கடைய முடியுமா'' என்று தம் விரல்களைக் காண்பித்தார். அவைகளில் நகங்கள் ஒட்டக் கத்திரிக்கப்பட்டிருந்தன. எனவே, மறுநாள் நான் சவத்தைப்பார்த்தபொழுது, அவர் கைவிரல்களில், சுமார் கால் அங்குலநீளம் நகங்களிருக்கவே, எனக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை! இன்னும் வாரத்திற்கு இரண்டுமுறை நான் அவருக்கு எண்ணெய் தேய்ப்பது வழக்கம். நான் அப்படிச் செய்த ஒவ்வொரு சமயமும், அவருடைய வலது காதின் பின்பக்கத்தில், ஒரு பெரிய மச்சத்தை பார்த்

திருக்கிறேன். சவத்தின் விரல்களில் நகத்தைக்கண்டதும், என் மனதில் சந்தேகமுண்டாய்விட்டதால், உடனே அதன் காதுகளைக் கவனித்தேன், நான் பார்த்த மச்சம் அதில் காணப்படவில்லை.''

சபேசன், அவனைப் போகச்சொல்லிவிட்டு, மறுபடியும் தன் தங்கையைப் பார்த்து,

"ராஜம்! ஆனால், நீ இவனுடைய சாக்ஷியத்தைக் கொண்டே, இப்பொழுது கொலை செய்யப்பட்டிருப்பவர் தாண்டவம்ஐயர் அல்ல என்று சொல்லிவிட்டாயோ?'' என்று கேட்க அப் பெண்மணி,

"நீ இக்கேள்வி கேட்பாயென்று எனக்குத் தெரியும். நானும், முதலில் இவன் இதைச் சொன்னதும், ஏதோ உளறுகிறானென்றே நினைத்தேன். அக்காரணத்தைக்கொண்டே, இதுவரையில், இதைப்பற்றி ஒருவரிடமும் சொல்லாமலிருக்கும்படி அவனிடம் சொல்லிவிட்டேன். நானும் பேசவில்லை. முதலில், எனக்கு இவனை நம்ப இஷ்டமில்லாமற்போனாலும், பிறகு, வரவர, என்மனதிலும் ஒருவித சந்தேகம் தோன்றியது! ஏனென்றால், இவ்விதம் புளுகுவதால் இவனடையக்கூடிய இலாபமென்ன? இன்னும், நான் வாசித்த பல நாவல்களில், பார்ப்பவர் பிரமிக்கத்தக்க விதம், இருவர் ஒரே, அங்கஅடையாளங்களுள்ளவராகவும், அவர்களைத் தனிமையில் பார்க்கும்பக்ஷத்தில், இவர் இன்னாரென்று அறியக்கூடாமலிருக்க முடியுமென்றும், வாசித்திருக்கிறேனாகையால், இக்கொலையிலும், இப்பேர்ப்பட்ட மர்மம் ஒருகாலிருக்குமோ எனச் சந்தேகித்து, இதை ஆராய்ந்தறிய நிச்சயித்தேன். இதை நான் மற்றவர்களிடம் கூறும் பக்ஷத்தில் அவர்கள் என்னைப் பரிஹஸிப்பார்களென்று வெட்கி, ஒருவரிடமும் சொல்லவில்லை. பிறகு, இந்தத் தாண்டவம் ஐயருடைய, பெட்டியிலிருந்த கடிதங்களையும், மற்ற வஸ்துக்களையும் குடையலானேன்!—'' என்று சொன்னதும், சபேசன், வியப்புற்று, அடக்கமுடியாத, ஆவலுடன்,



"ஆனால், அக்கார்யத்தை நீ ஏற்கனவே செய்துவிட்டாயோ?'' என்று வினவினான். ராஜம்,

"வாஸ்தவம்! ஆனால் அக்காரியத்தை நேற்று மத்தியானம், 2மணிக்குத்தான் செய்தேன். அதன் பலனாய் தாண்டவம் ஐயர், தினந்தோறும் தாம் செய்யும் கார்யங்களைக் குறித்துவைக்கும், ஒரு டைரி என்வசம் அகப்பட்டது; அதற்குள், அவர் கொலை நடந்ததினம் எழுதிய ஒரு கடிதமுமிருந்தது. எக்காரணத்தாலோ, அவர் அதை இன்னும் தபாற்பெட்டியில், போடவில்லை. உடனே நான் செய்த காரியம், பிசகானபோதிலும், என் ஆவலை அடக்கமுடியாமல், அதை வாசித்துப் பார்த்தேன். ஆஹா! எனக்குண்டான ஆச்சர்யத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. இந்தா! அக்கடிதத்தை நீயும் வாசித்துப்பார்.'' என்று சொல்லி, தன் மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துத் தன் தமையனிடம் கொடுத்தாள். அதைச் சபேசன், கீழ்க்கண்டவாறு வாசித்தான் :—

"இனி, என்னால் உனக்கு எதுவும் செய்யமுடியாது. இதுவரையில் நீ சென்னையில் செய்த அக்கிரமங்களை எல்லாம் விசாரித்துகொண்டேன். நீயும் நானும் பார்ப்பதற்கு ஒருவரைப்போலவே இருப்பதால், நான் அடைந்துவரும் கஷ்டங்களுக்களவில்லை. உன்னால் நான் என் உயிரையும் இழக்கவேண்டிவரும்போலிருக்கிறது! நம்மிருவருக்கும் ரத்தசம்பந்தமுன்டென்று நினைத்து இதுவரையில் நான் உனக்குச் செய்துவந்த உபகாரத்திற்கு நல்ல வெகுமதி அடைந்துவிட்டேன்.

ஆகவே, இதுமுதற்கொண்டு, நீயும் நானும், ஒருவரையொருவர் பார்க்காமலிருப்பதே நலம், இப்படிக்கு,

தாண்டவம்ஐயர்,

இக்கடிதமிருந்த கவரின்மேல், "டி. ஆர். முத்துஸாமி அய்யர், 5 நம்பர் வீடு,—அக்கிரஹாரம், ஜார்ஜ்டவுன் சென்னை.'' என்று விலாஸம் காணப்பட்டது.

இதையறிந்ததும், அவ்வாலிபர்களிருவரும், பேசவும், சக்தியற்று மரம்போல் நின்றார்கள். கடைசியில், சபேசன் தன் நண்பனை நோக்கி,

"ஏண்டா! ராஜேந்திரா! இதுவரையில், நீ இந்த முத்துஸாமி அய்யரைப் பற்றி என்னிடம் சொல்லவேயில்லையே." என்று கேட்க, ராஜேந்திரன்.

"இது எனக்கும் இப்பொழுதுதான் தெரியும். இது பெரிய மர்மமாகவே இருக்கிறது. நல்லவேளையாய், நம்மிடம், அவருடைய விலாஸமிருப்பதால் நீ உடனே சென்னைக்குச் சென்று, அவரைப்பற்றிய எல்லாவிஷயங்களையுமறிந்து வரவேண்டும். ஹா சபேசா! வாஸ்தவத்தில், தற்சமயம் கொலைசெய்யப்பட்டிருப்பவர், இந்த முத்துஸாமி அய்யராயிருந்து, என் தந்தை உயிருடனிருப்பாரா—" என்று, ஆச்சர்யத்தின் மிகுதியால், மேலே பேசமுடியாமல் நிறுத்திவிட்டான்.

* * * * *

அதேயிரவு சபேசன் கனகபுரியை விட்டுப்புறப்பட்டு, மறுநாட்காலை சென்னைக்கு வந்துசேர்ந்தான். கடைசியில், அவன், முத்துசாமி அய்யருடைய வீட்டை அடைந்தபொழுது, அது பூட்டப்பட்டிருப்பதைக்கண்டு, தயங்கியவண்ணம், கொஞ்சநேரம் நின்றுகொண்டிருந்தான். பிறகு, பக்கத்து வீடுகளில் விசாரிக்கத் தீர்மானித்து அவன், அவ்விடத்தை விட்டுக் கொஞ்சதூரம் போவதற்குள், சமீபத்தில், யாரோ,

"ஐயா! நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்ற சப்தமுண்டாகவே, நாலாபக்கங்களையும் கவனித்தான். அச்சமயம், சுமார், 18வயதுள்ள, ஒருசிறுவன் அவனை நோக்கி வந்து, மறுபடியும், அக்கேள்வியைக் கேட்கவே, சபேசன் முத்துஸாமி அய்யருடைய வீட்டைத் தன் விரலால் காண்பித்துக்கொண்டே,

"அப்பா! அதோ இருக்கும் வீடு யாருடையது?" என்று, வினவ, அச்சிறுவன்,



"அது எங்களுடைய வீடே. ஆனால், தற்சமயம் அதில் குடி வைத்திருக்கிறோம்." என்று விடையளித்தான்.

சபேசன்:—"அது பூட்டப்பட்டல்லவோ யிருக்கிறது?"

சிறுவன்:—"ஆமாம். தற்சமயம், அவர் கனகபுரிக்குப் போயிருக்கிறார்.

சபேசன்:—"அப்படியா? அவர் போய் இப்பொழுது எவ்வளவு நாட்களிருக்கும்?

சிறுவன்:—"சுமார் 10 தினங்களிருக்கலாம்."

சபேசன்:—"அவருடைய பெயர் முத்துசாமிஐயர் தானே?

சிறுவன்:—"ஆமாம். அவரை உங்களுக்குத் தெரியுமோ?"

சபேசன்:—"நன்றாய்த் தெரியும். இப்பொழுது அவரைக் காணும்பொருட்டே நான் வந்திருக்கிறேன்."

சிவறுன்:—"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?"

சபேசன்:—"நான் பம்பாயிலிருந்து வருகிறேன்."

சிறுவன்:—"நீங்கள் வருவது அவருக்குத் தெரியுமோ?"

சபேசன்:—"தெரியும். இன்றுமாலை அவர் ரயில்வே ஸ்டேஷனிலேயே சந்திப்பதாய் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்."

சிறுவன்:—"அப்படியானால், அவர் இதற்குள் திரும்பிவிடும் எண்ணத்துடனே போயிருக்கவேண்டும். என்ன அசௌகர்யமோ தெரியவில்லை. ஆனால், உங்களுக்கு அவர் எழுதியிருக்கும் கடிதத்தால் எப்படியும் இன்று அல்லது நாளை அவசியம் வந்துவிடுவாரென்று தோன்றுகிறது."

சபேசன்:—"அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆனால், அவர் வரும்வரையில் என்னசெய்வதென்று எனக்குத் தெரியவில்லை. இந்த ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் வேறு யாரும் கிடையாது."

சிறுவன்:—"அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். அவ்வீட்டின் சாவி எங்களிடமிருக்கிறது. அவர் வெளியூர் போகும்பொழுதெல்லாம் அதை எங்களிடம் கொடுத்துவிட்டுப்போவது வழக்கம். ஆகவே, அவர் வரும்வரையில், நீங்கள் அதில் தாராளமாய் இருக்கலாம்."

சபேசன்:—"பேஷ்! மிகவும் சந்தோஷம். சரி; அவர் இவ்வீட்டில் எவ்வளவு காலமாயிருந்துவருகிறார்.

சிறுவன்:—"கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களிருக்கும். இருங்கள்; இதோ சென்று சாவியை எடுத்துக்கொண்டு வருகிறேன்." என்று சொல்லிக்கொண்டே, அச்சிறுவன் பக்கத்திலிருந்த தன் வீட்டிற்குள் நுழைந்தான்.

நிற்க, சபேசனுக்குண்டான சந்தோஷத்திற்களவில்லை. "ஆஹா! என் அதிருஷ்டமே அதிருஷ்டம். இன்னும் கொஞ்சநேரம் இச்சிறுவனிடம் பேசும்பக்ஷத்தில், இந்த முத்துசாமிஐயருடைய விஷயங்களையெல்லாம் அறிந்துகொள்ளக்கூடும். இன்னும், சிரமமின்றி, அவருடைய அறையிலிருக்கும் கடிதங்களையும் மற்றச் சாமான்களையும் சோதிக்கலாம். அவைகளிலிருந்து கண்டிப்பாய் ஏதேனும் உளவு அகப்படுமென்று நம்புகிறேன்." என்று அவன் சிந்தித்துக்கொண்டிருக்கையில், அப்பையனும் சாவியுடன் வந்துசேர்ந்தான்.

பிறகு, இருவரும் முத்துசாமிஐயருடைய வீட்டைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார்கள். சபேசன் மேலும் கொஞ்சநேரம் அச்சிறுவனுடன் பேசிக்கொண்டிருந்தான். அதன்முடிவில், அப்பையன்,

"எனக்கு ஸ்கூலுக்குப்போக நாழியாய்விட்டது. உங்களுக்கு என்ன தேவையாயிருந்தாலும், என் தாயைக் கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள்." என்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.



அச்சிறுவன் போனபிறகு, சபேசன் சிந்தனையுடன் ஒருதரம் அவ்வீடு முழுமையும் சுற்றிப்பார்த்தான். அது பார்ப்பதற்குச் சிறியதாயிருந்தபோதிலும், அதில் பல அறைகளிருந்தன. அவைகள் அநேகமாய் பூட்டப்பட்டிருந்ததையும் தவிர, அதிக ஜனப்பழக்கமின்றி எங்கும் புழுதி படிந்திருந்தது. இன்னும் முத்துசாமிஐயர், அவ்வீட்டை பேருக்கு வைத்துக்கொண்டிருந்தாரேயொழிய, அதைஅதிகமாய் உபயோகப்படுத்தவில்லையென்று தோன்றியது. கடைசியில், சபேசன் அவ்வீட்டின் மாடியை யடைந்தான். அங்கிருந்த ஒரே அறையின் ஜன்னற்கதவுகள் திறந்திருக்கவே, உள்ளே எட்டிப்பார்த்தான். அதில் ஒரு கட்டிலும், சில பெட்டிகளுமிருப்பதைக் கண்டு, அதுவே தனக்கு அவசியமானதென்று நினைத்து, அதை நன்றாய்க் கவனித்தான். அது வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. உடனே தயாராய்த் தன்னுடன் கொண்டுவந்திருந்த துப்பறியும் தங்கவேலுவின் கொத்துச்சாவிகளை யெடுத்து, அவைகளில் ஒன்றைக்கொண்டு எளிதில் அக்கதவைத் திறந்துவிட்டான். பிறகு உள்ளே நுழைந்து, கூர்மையான பார்வையுடன், அவ்வறையின் நாலாபக்கங்களையும் கவனித்தான். எதிரில் சுவரில் ஒரு புகைப்படம் மாட்டப்பட்டிருந்தது. அதில் காணப்பட்டவர் பார்ப்பதற்கு வக்கில் தாண்டவம்ஐயரைப்போலவே யிருந்தார். சபேசன், இது தாண்டவம்ஐயரதன்று. இது முத்துசாமிஐயரதே. ஆஹா! என்ன ஆச்சர்யம்! என்று வியப்புற்று, அப்படத்தை உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தான். அதன்பக்கத்தில் ஒரு கம்பியில் கோக்கப்பட்டுச் சில கடிதங்கள் காணப்படவே, அவைகளையெடுத்து ஆவலுடன் வாசிக்க ஆரம்பித்தான். அவனுடைய ஆச்சர்யமும் சந்தோஷமும் அதிகரித்துக்கொண்டே வந்தன. அக்கடிதங்கள் அநேகமாய் வக்கில் தாண்டவம்ஐயரால் எழுதப்பட்டிருந்தன. அதுவரையில் சபேசனுக்கிருந்த சிறிது சந்தேகமும் நீங்கிவிட்டது. இன்னும் அக்கடிதங்களிலிருந்து, முத்துசாமிஐயர், பல துர்நடவடிக்கைகளுள்ளவர் என்பது வெளியாயிற்று. அக்கடிதங்களை யெல்லாம் வாசித்துமுடித்ததும், சபேசன் மறுபடியும் சிந்திக்கலானான்.

"சரி; தற்சமயம் கொலை செய்யப்பட்டிருப்பவர் இந்த முத்துசாமிஐயரென்றே தோன்றுகிறது. ஆனால், அவரை இவ்விதம் கொலைசெய்ய விரோதி யாரிருக்கக்கூடும்? அதொன்றும் இக்கடிதங்களிலிருந்து விளங்கவில்லை. தவிர, கொலை செய்யப்பட்டது முத்துசாமிஐயராயிருந்தால், தாண்டவம்ஐயர் போனவிடமெங்கே? அவரும் இதற்குள் கொலை செய்யப்பட்டிருப்பாரென்றே பயப்படுகிறேன். அப்படியே அவர் உயிருடனிருந்தபோதிலும், அவர் பெரும் ஆபத்திலாவது மாட்டிக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் அவரைக் கண்டுபிடிக்க, இந்த முத்துசாமிஐயரின் விரோதிகளைக் கண்டுபிடிக்கவேண்டியது அவசியம். ஏனென்றால், அவரும் அச்சண்டாளனிடத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறாரென்பதில் ஐயமில்லை......." என்று சிந்தித்துக் கொண்டிருந்த அவனுடைய பார்வை ஒரு மூலையில் காணப்பட்ட சில பெட்டிகளின்மேல் விழவே, அவைகளிலும் ஏதேனும் கடிதங்களிருக்கக்கூடுமென்று எதிர்பார்த்தவனாய், அவைகளையும் திறந்து குடையலானான். ஆனால் அவைகளில் விலையுயர்ந்த துணிமணிகளும் இன்னும் இதர சில சாமான்களுமிருந்தனவேயொழிய கடிதங்கள் ஒன்றுமில்லை. பிறகு மனச்சோர்வுடன் அவைகளை மறுபடியும் பூட்டிவிட்டு, அவ்வறையிலிருந்த அலமாரிகளையும் மற்ற இடங்களையும் சுமார் ஒருமணி நேரம் வரையில் சோதித்துப்பார்த்தான். எல்லாம் பிரயோஜனமில்லாமற் போய்விட்டன. பிறகு விசனத்துடன் ஒரு நாற்காலியிலுட்கார்ந்து கொண்டு மேலும் யோசிக்கலானான். இவ்விதம் அரைமணி நேரம் கழிந்தது. அதன்முடிவில், "சரி; சமீபத்தில் ஏதேனும் ஹோட்டலிருக்கும்பக்ஷத்தில் போய்ச் சாப்பிட்டுவிட்டுவந்து மறுபடியும் பார்ப்போம்." என்று தீர்மானித்து தன்னிடத்தைவிட்டு எழுந்திருந்தான். ஆனால், உடனே வெளியே போகாமல், மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் அலைந்தவண்ணமிருந்தன. கடைசியில் அவனுடைய பார்வை மற்றொரு மூலையில்கிடந்த ஒரு அழுக்குத்துணிமூட்டைமேல் விழவே தான் இன்னது செய்கிறோமென்பதையுமறியாமல், அதனை



[illegible]சென்று, அதைத் தூக்கினான். அதன்கீழ் ஒரு கடிதத்துண்டு தென்படவே, அதை ஆவலுடன் எடுத்துக் கவனித்தான். அது கிழிக்கப்பட்டிருந்தவிதத்திலிருந்து அக்கடிதத்தைக் கண்டதும், அதை வாசித்தவர் கோபங்கொண்டோ அல்லது அதைக் கிழித்தெறிந்துவிட நிச்சயித்தோ அதைச் சிறுத் துண்டுகளாய்க் கிழித்திருக்கிறாரென்றும், அத்துண்டுகளிலொன்றே தன்வசம் அகப்பட்டிருக்கிறதென்பதையும் கண்டுகொண்டான். அதில், அழகிய கையெழுத்தில், கீழ்க்கண்ட சில வாக்கியங்கள் காணப்பட்டன.

"......இவ்வளவு ஈவு இரக்கமில்லாத பாபியாயிருப்பீரென்று நான் நினைக்கவில்லை. இருந்தபோதிலும், நான் சொல்லும்படி நீர் செய்யும்பக்ஷத்தில் உம்மை இக்குழந்தையை உத்தேசித்து மன்னிப்பேன். ஆனால் நீர் மறுக்கும் பக்ஷத்தில் உம்மை லேசில் விடேன். உம்மைப் பலவிதத்திலும் அவமானப்படுத்துவதுமன்றி, என் தந்தையைக் கொண்டு உம்மேல் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளுவேன் என்பது நிச்சயம்........மங்களம்."

இதை வாசித்ததும், சபேசன் வியப்பும் திகைப்பு முற்று அப்படியே மரம்போல் நின்றான். "ஓஹோ! முத்துசாமிஐயர் மங்களம் என்ற ஒரு பேதைப்பெண்ணை மோசம்செய்து அவள் கற்பையழித்திருக்கிறார். அதன் பலனாய் அவள் ஒரு குழந்தையைப்பெற்று அதை என்ன செய்வதென்று தெரியாமல், தன்னைக்கெடுத்த இந்த முத்துசாமிஐயரை அதை வளர்க்கும்படி வேண்டிக்கொண்டிருக்கவேண்டும். தற்சமயம் காரியங்கள் நடந்திருப்பதிலிருந்து அவளுடைய வேண்டுகோளுக்கு முத்துசாமிஐயர் இணங்கவில்லை. இதையறிந்ததும் அப்பெண் நடந்த எல்லாவற்றையும் தன் தந்தையிடம் ஒப்புக்கொண்டு தன்னைக் கெடுத்து மோசம் செய்த பாபியின்மேல் தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கிறாள். ஆனால், இப்பெண் யார்? இவளுடைய தகப்பன் யார்? ஆஹா! இக்கடிதத்தின் மற்ற பாகங்களும் அகப்படுமானால் அது வெளியாகக்

கூடுமே!" என்று நினைத்து மறுபடியும் ஆவலுடனும் ஆத்திரத்துடனும் அவ்வீடுமுழுமையும் தேடியும் அவைகள் அகப்படவில்லை.

பிறகு மேலும் சிந்திக்கலானான். "பேஷ்! பேஷ்!! இது இப்படித்தானிருக்கவேண்டும். இதில் சந்தேகமே இல்லை. அவசியம் எப்படியாவது, இந்த மங்களத்தையும் இவளுடைய தகப்பனையும் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால் அதை எப்படிச் செய்வது?"

பிறகு மேலும் அரைமணிநேரம்வரையில் சிந்தாசாகரத்தில் மூழ்கியிருந்தான். அதன் முடிவில் திடீரென்று தன்னிடத்தைவிட்டுத் துள்ளிக்குதித்தான். தன் வியப்பையும் களிப்பையும் தாங்கமுடியாதவன்போல், பக்கத்திலிருந்த மேஜையைத் தன் வலதுகரத்தினால் ஓங்கி அறைந்தான். "ஆஹா! எனக்கிப்பொழுதல்லவோ ஞாபகம் வருகிறது. சரி; சரி; முத்துசாமிஐயரைக் கொன்றது சுமார் ஒரு மாதகாலத்திற்குமுன், தாண்டவம்ஐயருடைய பெண் ஜானகியின் கற்பையழிக்க எத்தனித்த அதே மனுஷ்யன் என்பது நிச்சயம். அவன், "ஹா! என் கண்மணீ! உன்னை மோசம்செய்து உன் கற்பையழித்த பாபியின் பெண்ணின் கற்பை இதோ அழித்துவிடுகிறேன். அச்சண்டாளனையும் லேசில் விடேன்." என்று சபதம்செய்துகொண்டதை நான் கேட்கவில்லையோ? பேஷ்! பேஷ்!! இந்த முத்துசாமிஐயரும், தாண்டவம்ஐயரும் பார்ப்பதற்கு ஒருவரைப்போலவே இருந்ததால், அவன், தாண்டவம் ஐயரே முத்துசாமிஐயர் என்று நினைத்துப் பழிக்குப் பழி வாங்குமெண்ணத்துடன், அவருடைய பெண்ணாகிய ஜானகியைக் கெடுக்க முயன்றான். ஹே ஈசுவரா! இந்த மங்களத்தையும் இவளுடைய தகப்பனையும் நான் சீக்கிரம் கண்டுபிடிக்க, மார்க்கத்தைக் காண்பித்து அருள்செய்வீராக." என்று தன் இரு கரங்களையும் கூப்பினான். பிறகு, "சரி; இவ்வீட்டில் இனி எனக்கு வேலையில்லை." என்று சொல்லிக்கொண்டே, அங்கிருந்த சாமான்களையெல்லாம் முதலிலிருந்தபடி வைத்துவிட்டு, கதவைப் பூட்டிக்கொண்டு,

188772



600 008

கீழே சென்றான். அவன் அவ்வ[illegible]த் திறந்ததும் வெளியே, சுமார் 45 வயதுள்ள ஒரு பாட்டி நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவள்,

"ஏண்டாப்பா! நீதான் முத்துசாமிஐயரைக் காண வந்திருக்கும் பிள்ளையாண்டானோ?" என்று வினவ, சபேசன் ஆமென்பதற்கு அடையாளமாகத் தன் தலையையாட்டினான். அந்தம்மாளுடைய முக ஜாடையிலிருந்து, அவளே தன்னை அங்கு அழைத்துவந்த சிறுவனுடைய தாயென்று கண்டுகொண்டு,

"பாட்டி! எனக்குக் கொஞ்சம் வெளியே போகவேண்டும். இந்தாருங்கள் இவ்வீட்டுச் சாவி." என்று வெளிக்கதவைப் பூட்டிச் சாவியை அந்த அம்மாளிடம் கொடுத்தான். அம்மாது அதை வாங்கிக்கொண்டே சபேசனை ஒருதரம் உற்றுநோக்கினாள். அவளுடைய முகத்தை நன்றாய்க் கவனித்ததும், சபேசன் அவள் தன்மேல் ஏதோ சந்தேகங்கொண்டிருக்கிறாளென்று நினைத்தான். இன்னும் அவள் லேசானவளல்லவென்பதையும், அவள் பிறரைக் கண்டதுமே, அவர்களுடைய மனதிலிருக்கக்கூடிய எண்ணங்களை எளிதில் கிரஹிக்கும் சக்தியுள்ளவளென்பதையும் கண்டுகொண்டான். அவன் எதிர்பார்த்ததுபோலவே, பாட்டி, திடீரென்று,

"ஏண்டாப்பா! உள்ளதைச் சொல்லு! நீ யார்? நீ இங்கு வந்த காரணமென்ன?" என்று கண்டிப்பான குரலில் வினவினாள்.

சபேசன், திடுக்கிட்டவனாய், மருண்ட பார்வையுடன், "நான் இந்த முத்துசாமிஐயரைப் பார்க்கும்பொருட்டு வந்தேன்." என்று விடையளித்தான். ஆனால் பாட்டி, அவனை நம்பாதவள்போல் மறுபடியும் ஏறஇறங்கக்கவனித்துவிட்டு,

"இந்தா! இவையெல்லாம் வீண்பேச்சு! நீ அவருடைய இரஹஸ்யங்களைக் கண்டுபிடிக்கும்பொருட்டு வந்தாயென்பதில் சந்தேகமில்லை." என்று உறுதியுடன் மொழிந்தாள். சபேசன், சிரித்துக்கொண்டே,

"... என்னைச் சந்தேகிக்கிறீர்கள் போலிருக்கிறது. சரி இருக்கட்டும்! ஆனால், அவரிடம் ரஹஸ்யங்களுண்டோ?" என்று கேட்கப் பாட்டி,

"அடே! நீ மகா வேலைக்காரனென்பது உன் முகத்தைப் பார்க்கும்பொழுதே தெரிகிறது. முதலில் நீ யாரென்பதையும், இங்கு வந்த காரணத்தையும் சொல். பிறகு அவரிடம் ரஹஸ்யங்களுண்டா இல்லையாவென்பதைப் பார்ப்போம். ஆனால் நீ அயோக்கியனாகத் தோன்றவில்லை. இன்னும் அவருடைய நடவடிக்கைகளைக் கண்டு பலதரம் நான் ஆச்சர்யப்பட்டிருப்பதால்......" என்று பேசிக்கொண்டிருந்தவள் தன் பேச்சை நிறுத்தி "நாம் இங்கு இப்படி வாசலில் நின்றுகொண்டு பேசுவது பிசகு. வா! என் வீட்டிற்குப் போவோம்." என்றுசொல்லித் தன் வீட்டைநோக்கி நடக்கவே, சபேசனும், பாட்டியிடமிருந்து பலவிஷயங்களையறியக்கூடுமென்று நம்பி, அவளுடன் சென்றான்.

இருவரும் அவ்வீட்டிற்குள் சென்றதும், பாட்டி சபேசனை ஒரு ஊஞ்சற்பலகையிற் உட்கார்ந்துகொள்ளும்படி சொல்ல, சபேசன் அப்படியேசெய்து, அவளுடைய முகத்தை ஆவலுடன் நோக்கியவண்ணமிருந்தான். பிறகு,

"ஏன் பாட்டி! நீங்கள், இந்த முத்துசாமிஐயருடைய நடவடிக்கைகளைக் கண்டு பலதரம் ஆச்சர்யப்பட்டிருப்பதாகச் சொன்னீர்களே. ஏன்?" என்று வினவினான்.

பாட்டி:—"வாஸ்தவம்! அவர் என் வீட்டிற்கு வந்து சுமார் 2 வருஷகாலமாய்விட்டது. அவர் யாரென்பது இன்னும் தெரியவில்லை. அவர் மாதம் ரூ. 200க்குமேல் செலவு செய்கிறார். ஆனால் அவருக்கு எதுவும் உத்தியோகமிருப்பதாய்த் தெரியவில்லை. எனவே நான் அவரைச் சந்தேகித்தது நியாயமே. அதன் பலனாய், அவருடைய கார்யங்களை நான் கவனித்ததில், அவைகள் அவ்வளவு திருப்திகரமாயில்லை. ஹூம்! உலகம் பலவிதம்!"



சபேசன்:—"பாட்டி! நீங்கள் பேசுவதைப் பார்த்தால், அவருடைய விஷயங்களெல்லாம் உங்களுக்கு நன்றாய்த் தெரியும்போலிருக்கிறதே?"

பாட்டி:—"கொஞ்சம் தெரியும். ஆனால் அவர் யாரென்பதும், அவர் இப்படி வேலையில்லாமல் இவ்வூரில் இவ்வளவு பணத்தைச் செலவழித்துக்கொண்டிருப்பதின் காரணமும் தெரியவில்லை."

சபேசன்:—"சரி; நீங்கள் அவருடைய கார்யங்களைக் கவனித்ததிலிருந்து என்ன அறிந்துகொண்டீர்கள்?"

பாட்டி:—"அது ஒரு பெரும் பாரதம். இன்னும் நான் அதை ஒரு அந்நியனிடத்தில் சொல்லுவது நியாயமல்ல."

சபேசன்:—"பாட்டி! நீங்கள் அப்படியொன்றும் பயப்படவேண்டாம். நான் நீங்கள் சொல்லுவதை வெளியிடமாட்டேன். அவரைப்பற்றிய விஷயங்களை எல்லாம் நான் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவச்யமாயிருக்கிறது."

பாட்டி:—(வியப்புற்று) "ஏன்? உனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?"

சபேசன்:—"அதுவும் ஒரு பெரிய பாரதம். ஆகை..."

பாட்டி:—"சரி; நீ உன் பாரதத்தைச் சொன்னால், நான் என் பாரதத்தைச் சொல்லுகிறேன். ஏனென்றால், மிகவும் அவசியமாயிருந்தாலொழிய, அவருடைய ரஹஸ்யங்களை வெளியிட எனக்கிஷ்டமில்லை."

சபேசன், பாட்டியிடமிருந்து விஷயங்களையறிய, தன் கதையை முதலில் சொல்லவேண்டியது அவசியமென உணர்ந்து, அக்கொலையைப்பற்றிச் சீக்கிரம் சொல்லி முடித்தான். அதைக் கேட்டதும் பாட்டிக்குண்டான திகிலுக்கும் ஆச்சர்யத்திற்கும் அளவில்லை. அவள்,

"அப்பா! இது மிகவும் பயங்கரமான பாரதம். ஆனால் இந்தச் சண்டாளனுக்கு இது நன்றாய் வேண்டும். சரி இருக்கட்டும். நீ இதுவரையில் என்ன கண்டுபிடித்தாய்?" என்று வினவினாள். சபேசன்,

"இவர் மங்களம் என்ற ஒரு பெண்ணை மோசம் செய்து அவளைக் கெடுத்துவிட்டாரென்பது நிச்சயம்." என்றதும், பாட்டி,

"உண்மையான விஷயம். சரி; இதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன் கேள். நான் அவரைச் சந்தேகித்து அவருடைய காரியங்களை கவனித்தேனென்று சொன்னேனல்லவா? சுமார் 4 மாதங்களுக்குமுன் ஒருநாளிரவு, மணி 12க்கு மேலாகியும், தூக்கம் வராததால் நான் என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அச்சமயம் ஒரு சிறு பெண் வேறு துணையில்லாமல், அவசரத்துடன், இத்தெருவின்வழியாய்ப் போவதைக்கண்டதும், ஆச்சர்யப்பட்டு, அவள் எங்குப் போகிறாளென்பதைக் கவனித்தேன். நான் சற்றும் எதிர்பார்க்காதவிதம், அவள் இந்த முத்துஸாமிஐருடைய வீட்டிற்குள் நுழையவே, மேலும் வியப்புற்று, எப்படியாவது அதென்ன விஷயமென்று கண்டுபிடிக்கத் தீர்மானித்து, அவ்வீட்டை நோக்கிச் சென்றேன். வாசற்கதவு திறந்தேயிருந்ததால், சற்றும் தயங்காமல் உள் நுழைந்தேன். ஆனால், மறுநிமிஷம், தான் அக்கதவைத் தாளிட மறந்துவிட்டதை யறிந்து, அப்பெண் கீழே வந்து, அதைத் தாளிட்டுக்கொண்டு, மறுபடியும் மாடியில் முத்துஸாமிஐருடைய அறைக்குச் சென்றாள். நானும் மெல்லப் பூனைப்போல் நடந்து, அவ்வறையின் சமீபத்திற் சென்று ஒரு ஜன்னலின் வழியாய் உள்ளே எட்டிப்பார்த்தேன். அங்கு நான் கண்ட காக்ஷியை நினைக்கும்பொழுது, இன்னும் என் வயிற்றைச் சங்கடம் பண்ணுகிறது. அப்பெண் தன் தேகங்குலுங்க, அழுதவண்ணம், இந்த முத்துஸாமிஐயருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு, கல்லுங்கரையும்விதம் என்னவோ கெஞ்சிக்



கொண்டிருந்தாள். அவளை வெளிச்சத்தில் பார்த்ததும் அவளும் பிராமணப்பெண் என்பதையும், இன்னும் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்து, நன்றாய்ப் படித்தவளென்பதையும் கண்டுகொண்டேன். ஆனால் அப்பொழுது அவளுடைய முகம் பயத்தினால் வெளுத்து விகாரமாயிருந்தது. அவளுடைய கைகால்கள் பரிதாபப்படத்தக்கவிதம் நடுங்கிக்கொண்டிருந்தன. அவளுடைய வார்த்தைகளிலிருந்து இந்தப் பழிகார முத்துஸாமிஐயர், அவளை விவாஹம் செய்துகொள்ளுவதாக ஆசை காட்டி, அவளைக் கெடுத்துவிட்டானென்றும், அதன் பலனாய், அவள் அச்சமயம் கர்ப்பமாயிருந்தாளென்றும், இன்னும் தன் இரஹஸ்யம் வெளியாகுமுன், தன்னை உலகமறிய மணந்துகொள்ளும்படி அவள் மன்றாடுகிறாளென்பதையும் அறிய, என் மனம் பட்டபாட்டை ஆதிசேஷனாலும் கூறமுடியாது. ஆனால் அவள் இவ்வளவு வயது முதிர்ந்த இந்த முத்துஸாமிஐயர் மேல் மோகங்கொண்டதைக் காண எனக்கு மிகவும் ஆச்சர்யமாயிருந்தது.

அவள் அப்படி நெருப்பிலகப்பட்ட புழுவைப்போல் தன்முன் துடிப்பதைக்கண்டு, சற்றும் மனமிளகாமல், அப்பாவி சிரித்து அவளை கண்டபடி பரிஹசிக்க ஆரம்பித்தான். சண்டாளன்! அவன் சொன்ன வார்த்தைகள் இன்னும் எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கின்றன.

"ஏண்டி! உனக்குப் பைத்தியமா? நான் இந்த வயதில் விவாஹம் செய்துகொண்டால் உலகம் பழிக்குமே. அடபாபமே! நீ இவ்வளவு ஜடமாயிருப்பாயென்று நான் நினைக்கவில்லையே. அசடே! கர்ப்பமாய்விட்டால் என்னடி? உலகில், கல்யாணமாகாத பெண்களும் விதவைகளும் கர்ப்பமாவது என்ன அதிசயமோ? எப்படியாகிலும் ரஹஸ்யமாய்ப் பிரஸவித்துவிட்டு வேறு எவனையாவது பிடித்துக்கொள். சரி; நாழியாய்விட்டது. போய்விட்டுவா. நீ இங்கிருப்பதை யாராகிலும் பார்த்துவிட்டால் என் பெயர் கெட்டுவிடும். வீணாய் என்னைச் சந்தியிலிழுக்காதே." என்றார்.

இதைக் கேட்டதும், அப்பெண் தன் தலைமேல் இடி விழுந்தவள்போல் காணப்பட்டாள். அசைவற்றுக் கொஞ்ச நேரம் நின்றுவிட்டுப் பிறகு மறுபடியும் மன்றாடினாள். ஆனால் அப்பாதகன், எதையும் லக்ஷியம் செய்யாமல்,

“அடியே! வேண்டாம். இப்பொழுதே சொல்லி விடுகிறேன். என்னால் உன்னைக் கட்டிக்கொண்டு அழ முடியாது. இனி, எனக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இதோ, நீ எனக்கு எழுதிய கடிதங்களையும் உன் படத்தையும் கொடுத்துவிடுகிறேன்.” என்று சொல்லி, ஒரு பெட்டியிலிருந்து சில கடிதங்களையும் ஒரு புகைப்படத்தையுமெடுத்து அவளிடம் எறிந்துவிட்டு, “நீ உடனே போய் விடவேண்டும். அப்படிச் செய்யாமல், நீ மேலும் வம்பு செய்வாயாகில், உடனே போலீஸ்காரர்களை அழைத்து, நீ என்னைப் பலவந்தம்செய்வதாக, அவர்களிடம் ஒப்பிவித்து விடுவேன்.” என்று பயமுறுத்த, அப்பெண், திகிலடைந்தவளாய், அக்கடிதங்களையும் தன் படத்தையும் எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு, அவ்வறையைவிட்டு வெளியே ஓடினாள். அப்பொழுது அவள் மடியிலிருந்து அப்படம் கீழே விழவே, அதை நான் மெல்ல எடுத்துக்கொண்டு, நானும் வெளியே நழுவிவிட்டேன். இதோ அப்படத்தைக் காண்பிக்கிறேன் பார்.” என்று சொல்லி, பாட்டி, சிலநிமிஷ நேரத்திற்கெல்லாம், சுமார் 17 வயதுள்ள ஒரு அழகிய பெண்மணியின் புகைப்படமொன்றைச் சபேசனிடம் கொடுத்தாள்.

அதேசமயம், வெளியில் யாரோ ‘அம்மா! அம்மா!’ என்று கூப்பிடும் சப்தம் கேட்க, பாட்டி வெளியே சென்றாள். அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு தபாற்காரன்,

“ஏனம்மா! உங்களுடைய மற்றொரு வீட்டிற்குப் புதிதாக யாரையாவது குடிவைத்திருக்கிறீர்களா?” என்று கேட்க, பாட்டி,

“இல்லையே. ஏன்?” என்றாள். தபாற்காரன்,



“அவ்வீட்டு விலாஸத்திற்குச் சபேசன் என்ற ஒருவருக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது.......” என்று சொல்லிக்கொண்டிருக்கையில், சபேசன் அங்குவர, பாட்டி, அவனைப் பார்த்து,

“ஏனப்பா! உன் பெயர் சபேசனா?” என்று கேட்க, சபேசன், ஆமென்று விடையளித்துவிட்டு, ஆவலுடனும், அவசரத்துடனும், தந்தியை வாங்கி, அதை உடைத்துக் கீழ்க்கண்டவாறு வாசித்தான் :—

“ஜானகி காணமற்போய்விட்டாள். உடனே வரவும்:
ராஜேந்திரன்.”

---

## அத்தியாயம் 11.

மறுநாட் காலை 8 மணி இருக்கும்.

கோபாலய்யர், தம் அறையில் ஒரு வர்த்தமானப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தார். சற்றுநேரத்திற்கெல்லாம், அவருடைய சிநேகிதர் பிள்ளையார்கோவில்தெரு சுந்தரமய்யர் உள்ளே வர, கோபாலய்யர், அவரை மரியாதையுடன் வரவேற்று, தம் சமீபத்திலிருந்த ஒரு ஆஸனத்தில் உட்கார்ந்துகொள்ளும்படி உபசரித்துவிட்டு, அவருடைய யோகக்ஷேமங்களை விசாரித்தார். சுந்தரமய்யர், புன்சிரிப்புடன்,

“என்னவோ இருக்கிறேன். சரி; நீ கொடுத்த நகைகளை இதோ கொண்டுவந்திருக்கிறேன். எல்லாம் சரியாய் இருக்கின்றனவா வென்று பார்த்துவிட்டுப் பெட்டியில் வை.” என்று சொல்லிக்கொண்டே ஒரு நகைப்பெட்டியைத் தன் நண்பரிடம் கொடுக்க, கோபாலய்யர், சிரித்துக்கொண்டே,

“ஏண்டா சுந்தரம்! ஒருகால் நீ ஏதேனும் அவைகளில் சூதுசெய்திருப்பாயென்று நான் சந்தேகிப்பேன்

என்பது உன் தாத்பரியமோ?" என்று அலக்ஷியமாய், அப்பெட்டியை வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டு, "சரி; என்ன சமாசாரம்?" என்று வினவினார்.

சுந்தரமய்யர் :—"சமாசாரமென்ன? ஆமாம்; அதிருக்கட்டும். உன் பெண்ணுக்கு நீ எப்பொழுது விவாஹம் செய்துவைப்பதா யுத்தேசம்?"

கோபாலய்யர் :—"இந்த வருஷம் அதை அவச்யம் நடத்திவிட நினைத்திருக்கிறேன். பிறகு ஈசன் செயல்."

சுந்தரமய்யர் :—"ஆனால் உனக்கு இவ்விஷயத்தில் கவலையும் சிரமுமில்லை. மாப்பிள்ளைதான் உனக்கு தயாராயிருக்கிறான்."

கோபாலய்யர் :—"வாஸ்தவம். அது விஷயத்தில் நான் அதிர்ஷ்டசாலியென்றே நினைக்கிறேன். லக்ஷரூபாய் வரதக்ஷிணை கொடுத்தபோதிலும், என் தங்கைபிள்ளை பாலகிருஷ்ணனைப்போன்ற பையன் அகப்படமாட்டான்."

சுந்தரமய்யர் :—"நீ எனக்குக் கொடுத்திருந்த இந்த நகைகளெல்லாம் உன் பெண்ணுடையவைதானே?"

கோபாலய்யர் :—"இல்லை. அவைகள் அவளுடைய தாயாருடையன."

சுந்தரமய்யர் :—"எப்படியும் அவைகள் உன் பெண்ணுக்குத் தானே சேரும்?"

கோபாலய்யர் :—"வாஸ்தவம். இன்னும் இவைகளைத் தவிர அவளுக்கு ஒரு வைர அட்டிகையும் பண்ணக் கொடுத்திருக்கிறேன். அது நேற்றே வந்திருக்கவேண்டும். அவசியம் இன்று வந்துவிடுமென்று நம்புகிறேன்."

சுந்தரமய்யர் :—"அப்படியா? அதை யாரிடம் செய்யக் கொடுத்திருக்கிறாய்?"

கோபாலய்யர் :—"பெரியதெரு வேணுகோபால செட்டியிடம் கொடுத்திருக்கிறேன். இதோ இந்த நகைகளும் அவருடைய கடையிலேதான் செய்யப்பட்டவை. பேஷ்! பேஷ்! இதோ அவரே வந்துவிட்டார்."



அச்சமயம் கனகபுரியில் மிகவும் நல்ல பெயருள்ள வைரவியாபாரி வேணுகோபாலசெட்டியார் உள்ளே நுழைந்தார். அவர், மரியாதையுடன் நமஸ்கரித்துவிட்டு, கோபாலய்யரை நோக்கி,

"ஸ்வாமி! தயவுசெய்து மன்னிக்கவேண்டும். அட்டிகை வர இன்னும் ஒருவாரமாகும். ஏனென்றால், என் கடையில், இதுவரையில் அதைச் செய்துவந்த வேலைக்காரன் ஜுரத்தில் விழுந்துவிட்டான்." என்று சொல்லவே, கோபாலய்யர்,

"அதனால் ஒன்றும் பாதகமில்லை. ஏன் நிற்கிறீர்? இப்படி உட்கார்ந்துகொள்ளும்." என்று ஒரு நாற்காலியைக் காண்பித்தார். அச்சமயம் சுந்தரமய்யர், தனக்கு அவசர கார்ய மிருப்பதாகச் சொல்லி, உத்திரவு பெற்றுக்கொண்டு, வெளியே சென்றார். பிறகு செட்டியாரும் கோபாலய்யரும் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். நடுவில் செட்டியாருடைய பார்வை கோபாலய்யர் பக்கத்திலிருந்த நகைப் பெட்டியின்மேல் விழவே,

"அதேது? நகைப்பெட்டி?" என்று வினவினார். கோபாலய்யர்,

"அது என் முதல் சம்ஸாரத்தின் நகைகள். இதுவரையில் இங்கிருந்த என் நண்பர் அவைகளைக் கடன்வாங்கிப் போயிருந்தார். இப்பொழுதுதான் மறுபடியும் திருப்பிக்கொடுத்தார். பெட்டியில் வைக்கவேண்டும்." என்று விடையளித்தார். செட்டியார்,

"அந்த நகைகளெல்லாம் என் கடையிலேயே செய்யப்பட்டனவல்லவோ? ஆஹா! அப்பேர்ப்பட்ட வைரங்கள் இப்பொழுது அகப்படுவதேயில்லை." என்று சொல்லிக்கொண்டே, அப்பெட்டியை யெடுத்து, அதைத் திறந்தார். பிறகு தன் மூக்குக்கண்ணாடியைப் போட்டுக்கொ

188772 600-008

ண்டு கொஞ் ... ஆ... டன் உற்றுநோக்கியவண்ணமிருந்...

அச்சமயம் கோபாலய்யருடைய சம்ஸாரம் காமாக்ஷி உள்ளே வந்தாள். அவள் செட்டியாரிடமிருந்த நகைப் பெட்டியைக் கண்டதும் கலவரப்பட்டவள்போல் காணப் பட்டாள். நிற்க, செட்டியார், அந்நகைகளை யுற்றுநோக்கியதும், திடுக்கிட்டார். பிறகு, அவசரத்துடன் ஒவ்வொன்றாய்க் கவனித்தார். கடைசியில் சொல்லொணு ஆச்சர்யத்துடனும், பதட்டத்துடனும்,

"கோபாலய்யர்வாள்! உங்களுடைய நண்பர் உங்களை மோசம் செய்துவிட்டார். இவைகள் எல்லாம் சுத்த சூது நகைகள்." என்று கூவினார்.

இதைக் கேட்டதும், காமாக்ஷியின் முகம் பிணத்தின் முகத்தைப்போல வெளுத்தது. உடனே அவள், சற்றும் தாமதிக்காமல், அவ்வறையைவிட்டு வெளியே போய்விட்டாள். கோபாலய்யரோ, திகைப்புற்று ஒன்றும் புரியாமல்,

"செட்டியாரே! நீர் சொல்லுவது நம்பத்தக்கதாயில்லையே. என் நண்பர் மிகவும் யோக்கியராயிற்றே. இப்பேர்ப்பட்ட கார்யத்தை அவர் ஒருநாளும் செய்யக்கூடியவரல்லவே." என்று சொல்ல, செட்டியார், அதிகரித்த பதட்டத்துடன்,

"ஸ்வாமி! உலகத்தில் எல்லோரும் உங்களைப்போலவே யிருப்பார்களென்று நம்புகிறீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். உடனே இதைப் போலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டும். இப்பொழுதே அவர் வீட்டை சோதனை போட்டால் கண்டிப்பாய் உங்களுடைய நகைகள் அகப்படும்." என்று கூக்குரலிட்டார். ஆனால் கோபாலய்யர், மெச்சத்தக்க பொறுமையுடனும் சாந்தத்துடனும்,

"இவ்விஷயத்தில் நாம் அவசரப்படுவது பிசகு. நகைகள் கிடைத்துவிடும். சிநேகிதர்கள் கிடைக்கமாட்டார்கள்." என்று விடையளிக்கவே, செட்டியார்,